பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி
## The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 17 | புதன்கிழமை | (03.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 258

ஆசியா கண்டத்தில் முதலாம்
தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# குரங்குபாஞ்சானில் விடுதலைப் புலிகள் புதிய முகாம் அமைத்துள்ளனராம்!

## ஆராயுமாறு இராணுவம் கோரிக்கை; கண்காணிப்புக்குழு இன்று திருமலை விஜயம்

(கொழும்பு)

திருகோணமலை குரங்குபாஞ்சான் முகாமுக்கு அருகில், இன்னொரு புதிய முகாமை விடுதலைப் புலிகள் அமைத்துள்ளதாக வெளிவரும் தகவல்கள் குறித்து, உடனடியாக ஆராயுமாறு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரட்ண உறுதிப்படுத்தியுள்ளார்.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள புலிகளின் குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக இன்னமும் தீர்வு காணப்படாத நிலையில் மீண்டும் அப் பகுதியில் இன்னொரு முகாம் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ளதாக, இராணுவத் தரப்பிடமிருந்து கடிதமொன்று தமக்குக் கிடைத்துள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் அக்னிஸ் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் குறித்து ஆராய்வதற்காகவும் நிலைமையை நேரில் அவதானிப்பதற்காகவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இன்று திருகோணமலை குரங்குபாஞ்சான் பகுதிக்குச் செல்லவுள் (10ம்பக்கம் பார்க்க)

## மண்டையன் குழு எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியாவில் பொங்கு தமிழ் நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடுகளில் ஈடுபட்டுவரும் விழா ஏற்பாட்டாளர்களை எச்சரிக்கும் தொனியில் 'மண்டையன் குழு' எனக் குறிப்பிட்டு அவர்களுக்கு தனித்தனியாக அநாமதேயக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பொங்கு தமிழ் நிகழ்வை நடாத்தக் கூடாதெனவும், அதற்கான ஏற்பாடுகளை உடனடியாகக் கைவிடுமாறும், இல்லையேல் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனவும் அக் கடித்தில் எச்சரிக்கப்பட்டுள்ளதாக வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ-13)

# யுத்தம் ஆரம்பித்தால் உங்கள் நிலை என்ன?
# தமிழ் பேசும் இளைஞர்களே
# பொலிஸில் சேராதீர்கள்!

## விடுதலைப் புலிகள் அறிவுறுத்தல்

(மட்டக்களப்பு நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை எந்த இராணுவ சக்தியாலும் வென்றுவிட முடியாது.பொலிஸ் சேமப் படையில் இணைகின்ற தமிழ் பேசும் இளைஞர்களே சிந்தியுங்கள். பொலிஸ் சேமப் படையில் இணைவதை உடன் நிறுத்துங்கள். யுத்தம் மீண்டும் வந்தால் நீங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவர்களாகக் கருதப்படுவீர்கள். அப்போது உங்கள் நிலை பரிதாபகரமானதாக அமையும் என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

(10ம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிசன்-யசூசி அகாஷி இலங்கைக்கு வருகின்றனர்

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் மற்றும் ஜப்பானின் விஷேட தூதுவர் யசூசி அகாசி ஆகிய இருவரும் அடுத்த வாரம் இலங்கை வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தடைப்பட்டிருக்கும் அரசு-விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான மீள ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளும் நோக்கிலேயே இருவரும் இலங்கைக்கு வரவுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை வரும் இருவரும் அரச தரப்புடனும், வன்னி சென்று விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவர். (இ)

## ஜனாதிபதி சந்திரிகா-பிரதமர் ரணிலுடன் இணைந்து செயற்பட வேண்டும்
### சர்வதேச நாணய நிதியம் கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பிரதிநிதி ஜெரமி காட்டர் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா,அரசாங்கத்தை வழி நடத்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் இயலுமானவரை இணைந்து செயற்பட வேண்டுமென்று கேட்டுள்ளார்.

இதுவே சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாடு எனவும் தெரிவித்த அவர் தற்போதைய அரசியல் ஸ்திரமின்மை மற்றும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்குமிடையில் காணப்படும் விரிசல்கள் பற்றியும் சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாட்டினை விளக்கினார்.

அரசியல் ஸ்திரமின்மை பற்றி அவர் கலந்துரையாடுகையில்; இது ஒவ்வொரு தனிநபருக்கும் கவலை தரும் விடயமாகும். ஜனாதிபதி இயலுமானவரை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதனை நாம் விரும்புகிறோம். இதன் மூலம் நாட்டின் (10ம் பக்கம் பார்க்க)

## வவு-நகரில் இரவு வேளை பொலிஸார் சுற்றிவளைப்பு
### தமிழ் இளைஞர்கள் கைது

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் நேற்றும், நேற்று முன்தினமும் இரவு வேளைகளில் பொலிஸார் சுற்றி வளைத்து நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரஸ்தாப இளைஞர்களைக் பொலிஸார் எந்தவித காரணமும் (10ம் பக்கம் பார்க்க)

## வேலைக்குச் சென்ற நால்வரை காணவில்லை
### ம.உ.ஆ.கு.வில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கூலி வேலைக்கு ஒன்றாகச் சென்ற நால்வரைக் காணவில்லை என அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ் அலுவலகத்தில் நேற்றைய தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியன்று காலை 8மணியளவில் வரணி-சுட்டிபுரம் என்ற இடத்திற்கு கூலி வேலையின் நிமித்தம் வீட்டை விட்டுப் புறபபட்ட கொடிகாமம் தவசிக் குளததைச் சேர்ந்த சி.மணிவண்ணன் (வயது 21) ந.உதயகுமார் (வயது19), சி.லோகேஸ்வரன் (வயது18) ஆகியோரும் மிருசுவிலைச் சேர்ந்த செ.சசிகரன் (10ம்பக்கம் பார்க்க)

## பாலாவின் உடல்நலக் குறைவை சிலர் தமது அரசியலுக்கு பயன்படுத்துகிறார்கள்!
### சு.ப.தமிழ்ச்செல்வன் கவலை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் பேச்சுவார்த்தைக் குழுவில் இருந்து நீக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் லண்டன் ஐ.பி.சி. தமிழ் வானொலிக்கு அளித்த செவ்வியில் மறுப்புத் தெரிவித்திருக்கின்றார்.

இடைக்காலக் கட்டமைப்புத் தொடர்பாகவும் தற்கால அரசியல் நிலை பற்றியும் லண்டன் ஐ.பி.சி. தமிழ் வானொலிக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது;

எங்களுடைய அரசியல் ஆலோசகர் ஜப்பான் மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தது. அதனால் தான் நாங்கள் பரிஸில் மாநாட்டினைக் கூட்டியிருந்தோம் ஆனால் அவருடைய உடல் நலக் குறைவு காரணத்தினால் அவர் அங்கே சமுகம் அளிக்க முடியாமல்போய்விட்டது. நாங்கள் அவ்வப்போது தொடர்பு கொண்டு அவருடைய ஆலோசனைகளைப் பெற்று இந்த இடைக்கால நிர்வாக வரைபை உருவாக்கியிருக்கின்றோம்.

இதனை அரசியல் வங்குரோத்து (10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில்
# ஜே.வி.பி. கலந்து கொள்ளவில்லை
## கட்சிகளிடையே சந்தேகம் ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகத்தர்களால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை நிறுத்தப்போராட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக எதிர்க் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி கலந்து கொள்ளவில்லை.

இது குறித்து எதிர்க் கட்சிகளிடையே பலத்த சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதுடன் கட்சி சார்பில் ஒரு பிரதிநிதியைக் கூட அனுப்பவில்லை என எதிர்க் கட்சிகள் விசனம் தெரிவித்துள்ளன.

எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் கண்டியில் இக் கூட்டம் இடம் பெற்றது.

குறிப்பாக தொழிற்சங்க நடவடிக்கைகளின் போது நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பது, இதன் போது ஒத்துழைப்புடன் செயற்படுவது என்பன பற்றி ஆராய்வதற்காக இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

நாட்டில் மேற்கொள்ளப்படும் அனைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் தலைமை தாங்குவது ஜே.வி.பி. தான் என்பது அரசாங்கத்தின் குற்றச்சாட்டாகும்.

இத்தகைய பின்னணியில் வேலை நிறுத்தங்கள், அவற்றில் பங்குபற்றும் ஊழியர்களின் பாதுகாப்பு என்பன பற்றி ஆராயும் முக்கிய கூட்டத்தை ஜே.வி.பி. பகிஷ்கரித்தது ஏன்? என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

ஆனால், இக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

இக் கூட்டத்தில் பேரியல்அஷ்ரப், தினேஷ் குணவர்த்தன, ராஜா கொலுரே, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் கலந்து கொண்டனர். (தி)

# மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களுக்கு தரமற்ற அரிசி விநியோகம்
## அரச அதிபர் தலையிட்டுத் தடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஒட்டுமடம் சந்தியில் அமைந்துள்ள யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 4ஆம் இலக்க கிளையூடாக மீளக் குடியமர்த்த முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்ட அரிசி தரமற்றது என கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்படி அரிசியை விநியோகிக்கத் தடை விதித்த அரச அதிபர்,. உண்பதற்கேற்ற நல்ல அரிசியை உடன் விநியோகிக்குமாறு அவசர பணிப்புரை விடுத்துள்ளார்.

மேற்படி கிளையில் நேற்றைய தினம் நிவாரணம் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட அரிசி தரமற்றதாகக் காணப்பட்டமை குறித்து சம்மந்தப்பட்டவர்கள், மக்கள் பணிமனைத் தலைவர் பீ.ஏ.எஸ் சுபியானிடம் நிவாரண அரிசியுடன் சென்று முறையிட்டனர்.

இது விடயம் அரச அதிபருக்கு உடனடியாகவே எடுத்து விளக்கப் பட்டதையடுத்து அரச அதிபர் மேற்படி மாற்று நடவடிக்கைகயை மேற்கொண்டார் எனத் தெரிய வருகிறது.

(உ-7)

# சித்திர வழிகாட்டல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரத்தில் சித்திரக் கலையை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்காக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றச் சித்திரக் கலைத் துறையினரால் விசேட வழிகாட்டல் வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கமைய,எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படும். இவ்வகுப்புகள் பிரதி ஞாயிறு தோறும் காலை 9.30 மணிமுதல் மு.ப 11.30 வரை இடம்பெறும் எனவும்,இதற்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார். (உ-18)

# பரீட்சை மீளாய்வுப் பெறுபேறுகள்

2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் மீள் பரிசீலனைப் பெறுபேறுகளை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி அடைந்துள்ளதாக பரீட்சைகள ஆணையாளர்நாயகம் விஜயசிறி தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சையின் பெறுபேற்றை மீள்பரிசீலனை செய்வதற்கு சுமார் 60 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைகக்ப் பெற்றுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர்நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# கசிப்புடன் கைதான பெண்ணுக்கு ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

பெருமளவு கசிப்புடன் கைது செய்யபட்ட பெண்ணிற்கு ஒரு இலட்சம் அபராதமும் ஒருவருட கடுழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் ஆலயப்பகுதியைச் சேர்ந்த பா.பத்மாவதி என்ற குடும்பப்பெண் 4 பரல்களில் கசிப்பு வைத்திருந்தமை தொடர்பாக கையும் மெய்யுமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை, குறிக்கப்பட்ட அபராதத்தை செலுத்தத் தவறின் மேலும் ஒருவருடம் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் அத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-4)





சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும் கட்டாய ஆட்குறைப்புக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்றைய தினம் கூட்டுதாபன ஊழியர்கள் மகஜர் கையளித்த போது எடுக்கப்பட்ட படங்கள்

படங்கள் - ஜெராட்

# மீண்டும் கண்டி விளையாட்டு கழகம் சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

கிளிபேட் கிண்ண றக்பி சுற்றுப் போட்டியில் இவ்வாண்டுக்கான இறுதிப் போட்டியில் கண்டி விளையாட்டுக் கழகம் மீண்டும் சம்பியனாகியுள்ளது.

மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கண்டி விளையாட்டுக் கழகம் 30:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சி.எஸ்.அண்ட் எப்.சீ.ஆர் அணியை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டுள்ளது.

இதன் மூலம் தொடர்ச்சியாக 5வது வருடமாகவும் அச் சுற்றுப் போட்டியில் கண்டி விளையாட்டுக் கழகம் சம்பியனாக வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-68)

# சம்பியன் பட்டத்தை பரிஷ் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பட்மின்ரன் சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த மாவட்ட ரீதியான பட்மின்ரன் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி உள்ளரங்கத் திடலில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினை எதிர் கொண்டு 3:2 என்ற பெறுபேறுகளின அடிப்படையில் பரிஷ் விளையாட்டுக் கழகம் வெற்றி கொண்டது.

மூன்று ஒற்றையர் ஆட்டங்கள் மற்றும் இரண்டு இரட்டையர் ஆட்டங்கள் கொண்ட இவ் இறுதிப் போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் இரண்டு ஒற்றையர் ஆட்டங்களிலும் ஒரு இரட்டையர் ஆட்டத்திலும் வெற்றி பெற்றது.

எனைய இரு போட்டிகளையும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி கொண்டது.

(க-68)

# பாடசாலை மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ.வலயக் கல்வி அலுவலகம் இன்றுமுதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியை நடத்தவுள்ளது.

அதன்படி இன்று யாழ்.கோட்டப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும்,

நாளை வியாழக்கிழமை நல்லூர் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் ,

இறுதிநாளான எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோப்பாய்க கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு யாழ்.கிறிஸ்தவ கல்லூரியிலும், முற்பகல் 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை முகாமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தரம் 10 முதல் 13 வரை கல்வி கற்கின்ற 5 மாணவர்கள் ஒவ்வோர் பாடசாலையில் இருந்து இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-7)

# மெய்கண்டதேவர் குருபூசையை ஒட்டி பண்ணிசைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவ சித்தாந்த பண்டிதர் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள மெய்கண்டதேவா குருபூசையை முன்னிட்டு எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி கல்லூரி வீதியிலுள்ள சைவ பரிபாலன சபை மண்டபத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் பண்ணிசைப் போட்டி நடைபெறவுள்ளுது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது முழுப் பெயர்,முகவரி கல்விகற்கும் தரம், பாடசாலையின் பெயர், மாணவரின கையொப்பம், அதிபரின் உறுதியுரை என்பவற்றை உள்ளடக்கிய வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்து இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அ.இராசரடணம், செயலாளர்,சைவசித்தாந்த பண்டிதர் சங்கம்,56 விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை அடுத்த மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள மெய்கண்ட தேவர் குருபூசையன்று மேற்படி போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

(உ-10)

# கிரிக்கெற் போட்டித் தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது

(யாழ்ப்பாணம்)

19 வயதிற்குட்பட்ட இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிறிக்கெற் போட்டித்தொடரில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

காலி சர்வதேச விளையாட்டு அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டித் தொடரில் இலங்கை அணியை ஒன்பது விக்கெற்றுகளால் வெற்றி கொண்டதன் மூலம், இத்தொடரில் 3:0 என்ற பெறுபேறுகளின் அடிப்படையில் பாகிஸ்தான் அணி இவ்ஒரு நாள் போட்டித் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இந்த இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 188 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.3 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெற்றை மட்டும் இழந்து 194 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

(க-68)

# உதைபந்தாட்டப் பயிற்சிமுகாம் 5ஆம் திகதி நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பாட்சாலைகளின் விளையாட்டுச் சங்கம் இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள சர்வதேச தரம் பெற்ற உதைபந்தாட்டப் பயிற்றுநர் ஆர்.பிரான்சிஸ் மூலம் நாடாத்தி வரும் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் தொடர்பில் மூன்றாம் கட்டம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 27ம் திகதி தொடங்கி 31ம் திகதி வரை நடைபெற்றது

இம் முகாமில் உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை, வல்லை சிவகுரு வித்தியாலயம், இமையாணன அ.த.க பாடசாலை பரு.வேலாயுதம் ம.ம வித்தியாலயம், அல்வாய் வடக்கு ஆர்.சி வித்தியாலயம் மற்றும் ஹாட்லிக் கல்லூரி, தேவரயாளி இந்துக் கல்லூரி, நெல்லியடி ம.ம. வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை ஆகியன உள்ளிட்ட 12 பாடசாலைகளிலிருந்தும் 48 மாணவர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை நேற்று முதல் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்று வரும் தென்மராட்சி மற்றும் தீவக வலய மாணவர்களுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 5ம் திகதி நிறைவு பெறவுள்ளது.

யாழ் விளையாட்டுச் சங்கத் தலைவர் சிவகடாட்சம் தலைமையில் இடம்பெறவுள்ள இறுதி நாள் நிகழ்வில் இப் பயிற்சியில் கலந்து கொண்ட சகலருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக மேற்படி பயிற்சிகளின் ஒருங்கிணைப்பாளர் கப்டன் டீ.ஏ.எம்.குணசிங்கம் தெரிவித்துள்ளார். (உ-110)

# வெற்றி வாய்ப்பை நழுவ விட்ட இல. அஞ்சலோட்ட அணியினர்

(யாழ்ப்பாணம்)

பிரான்சின் பாரிஸ் நகரில் நடைபெற்று வருகின்ற உலக மெய்வல்லுனர் போட்டிகளில் இலங்கை அணியின் 4x400 மீற்றர் ஆண்களுக்கான அஞ்சல் ஓட்ட அணியினர் அடுத்த சுற்றுக்கு தகுதிபெறத் தவறியுள்ளனர். கடந்த 30ம் திகதி நடைபெற்ற மூன்றாவது தகுதிகாண் சுற்றில் வெற்றி பெற முடியாது இலங்கை அஞ்சல் ஓட்டக் குழுவினர் வெளியேறியுள்ளனர்.

இவ் 4x400 மீற்றர் இலங்கைக்கான அஞ்சல் குழுவில் பிரசன்ன சம்பத், அமரசேகர, ரொகான் பிரதீப்குமார, சுகத் திலகரட்ண, ரங்க விமலவன்ச ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இதே வேளை இந்த தகுதிகாண் சுற்றில் முதலாவது இடத்தினை பிரான்சும், இரண்டாவது இடத்தினை பிரிட்டனும் பெற்றதுடன் அடுத்த சுற்றுக்கும் தகுதி பெற்றுள்ளன.

பெண்களுக்கான 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியின் இறுதி போட்டியில் வெற்றி பெற்று பிரான்ஸ் நாட்டு மகளிர் அணியினர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

(க-68)

## சிறு விளம்பரம்

### நாடக நூல்கள்

''வலம்புரி'' யில் இலக்கிய விமர்சனம் நூலின் விமர்சனம் வாசித்தீர்களா? 360 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் ஏனைய நாடக நூல்கள்: 1. நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. எங்கள் நாடு. (7567)


## சிவதொண்டன் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினரால் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் ''சிவதொண்டன்'' ஓகஸ்ட் - செப்ரெம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது. (உ-10)

## அங்குரார்ப்பண விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பவள விழாவையொட்டி இன்று புதன் கிழமை மு.ப.10.00மணிக்கு கலலூரி அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் ''அங்குரார்ப்பண விழா'' கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா, பாடசாலை பழைய மாணவர் சங்கத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் மற்றும் வே.கருணாகரன், அ.குமரன் ஆகியோரின் வாழ்த்துரையும் இளைப்பாறிய அதிபரும் சமாதான நீதிவானுமாகிய க. சண்முகலிங்கத்தின் நிறுவுனர் நினைவுப் பேருரையும், கவிமாமணி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் கவிதாஞ்சலியும் இடம்பெறவுள்ளன. (உ-18)


**செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

**ஆயுள் பகுதியின்**

**சகல வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்குமான**

## அறிவித்தல்

எமது யாழ். கிளையின் உதவி விற்பனை முகாமையாளராகக்கடமையாற்றிய திரு. தம்பிஐயா ஜெயசந்திரன் தற்போது எமது கம்பனியுடன் எவ்வித தொடர்பிலும் இல்லை என்பதையும், இன்றில் இருந்து இவருடன் கம்பனி தொடர்பாகச் செய்யப்படும் எவ்விதத் தொடர்புகளுக்கோ அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கோ கம்பனி பொறுப்பு அல்ல என்பதையும் அனைவருக்கும் இவ் அறிவித்தல் மூலம் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

**"ஆயுள் பகுதி"**

560, 2ம் மாடி,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6612)


# பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 110 பேர் கைது

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 110 சந்தேக நபர்கள் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரிவித்துள்ள பொலிஸ்மா அதிபர்,

இவ்வருட ஆரம்பம் முதல் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்ற கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் பெருந்தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றில் 135 கைத்துப்பாக்கிகள்.131 கைக்குண்டுகள்,11 ஆயிரத்து 976 தோட்டாக்கள் மற்றும் கூரிய கத்திகள், வாள்கள் என்பனவும் அடங்கும்.

எனது தலைமையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவும், 34 பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளில் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுக்களும் இணைந்து மேற்குறிப்பிடப்பட்ட ஆயுதங்களையும், சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளன.

நாடளாவிய ரீதியில் இத்திட்டத்தை தொடர்ந்தும் செயற்படுத்த அனைதது்பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் உத்தரவிட்டுள்ளேன்.

இதேவேளை, பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் குற்றப்புலனாய்வுப்பிரிவு பொலிஸாரால் தேடப்பட்டு வந்த மூவர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்களைக் கைது செய்ய சர்வதேச பொலிஸாரின் உதவிகளைப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)


# கலாலயா

## பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

**மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்**

3 மாத கால

கேக் ஐஸிங், சமயல் கலை, கூந்தல் அலங்காரம், FABRIC PAINTING பயிற்சிகள்.

6 மாத கால

உடை தயாரித்தல், பூவேலை, கைவேலைப் பயிற்சிகள் இத்துடன் கொழும்பிலிருந்துவரும் பிரபல அழகுக்கலை நிபுணரால் 3 நாட்கள் FACIAL அழகுக்கலை வகுப்புகளும் நடத்தப்படும்.

- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப்பயிற்சிக் [illegible]கெல்லை கிடையாது.

சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்:- 07.09.2003
கிழமைநாள் வகுப்புகள் ஆரம்பம்:- 10.09.2003


மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2.00 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

-இயக்குநர்.


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ். மாவட்டம்

## செப்ரெம்பர் 1 தொடக்கம் செப்ரெம்பர் 7 வரை

## மிதிவெடி வெடிபொருட்களிலிருந்து நாம் எம்மை பாதுகாப்பதற்கு



அபாயமுள்ள பிரதேசங்களை தவிர்த்து நடப்போம்.

அதே நேரம் மிதி வெடிபொருட்களைக் கண்டால் அவற்றிற்கு அருகே செல்வதை தவிர்த்து மற்றவர்களிற்கும் அவ் ஆபத்து சம்பந்தமான தகவலை வழங்குவதோடு மட்டுமல்லாது, உடனடியாக சம்பந்தப்பட்ட பின்வரும் நிறுவனங்களோடு நேரடியாகவோ அல்லது எங்கள் கிராமத்தலைவர், கிராமசேவையாளர் ஊடாகவோ தொடர்பு கொள்ளுவோம்.

- மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், அரச அதிபர் அலுவலகம், யாழ்ப்பாணம்.
- HALO TRUST, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
- அருகில் உள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள்

நாம் நமது நாளாந்த தொடர்பாடல் விடயங்களில் இருந்து அந்நியமான பிரதேசங்களில் தொடர்புகளை மேற்கொள்ளும்போது மிதிவெடி, வெடிபொருட்களை காண நேர்ந்தால் அதனை உதாசீனம் செய்யாது உயர்ந்த மனிதாபிமான நோக்கில் அவ்வூர்த் தலைவர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு ஆபத்துக்களைத் தடுக்க உதவுவோம்.

இப்பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் எவ்வேளையிலும் மக்களின் நலன் கருதி செயற்படத் தயாராக இருப்பதனால், அவற்றை எங்கள் நிறுவனமாகக் கருதி அவர்களுடன் நேசக்கரம் நீட்டி அவர்கள் சேவையைப் பெற்று எங்களை நாம் பாதுகாத்துக்கொள்வோம்.

(C/6601)

**மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.**

# மத்தியகிழக்கு சமாதானத்திற்கு சர்வதேச தலையீடு அவசியம்

## ரஷ்யா வலியுறுத்துகிறது

(மொஸ்கோ)

மத்தியகிழக்குச் சமாதான முயற்சிகளை மீண்டும் உரிய பாதையில் இட்டுச் செல்வதற்குச் சர்வதேச தலையீடு அவசியம் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ரஷ்யா ஆகியவற்றின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று வெகுவிரைவில் நடைபெறுமென ரஷ்ய உதவி வெளிவிவகார அமைச்சர் ஜூரி பெரிக்றோல் கூறியுள்ளார்.

இக்கூட்டத்தை எங்கு, எப்போது நடத்துவது என்பது குறித்து ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மத்திய கிழக்கின் சமாதானத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை நீக்குவதற்கு இந்த நான்கு நாடுகளும் பங்குகொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலியர்களும், பலஸ்தீனியர்களும் பதற்றத்தைத் தவிர்க்க முடியாத நிலையில் உள்ளதால், சர்வதேச நாடுகளின் தலையீடு அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (பி-2)

# தளநிலைகளை ஆராய ஜப்பானிய விசேட குழு ஈராக் செல்கிறது

(டோக்கியோ)

ஈராக்கின் உண்மை நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக விசேட குழுவொன்றை அங்கு அனுப்புவதற்கு ஜப்பான் தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கைகளுக்குப் பின்னர் ஈராக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வேண்டிய உதவிகள்ள வழங்கமுடியும் என ஜப்பான் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக்கில் யுத்தம் இடம்பெறாத பிரதேசங்களில் பாதுகாப்புக் கடமைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என ஜப்பான் அரசாங்கம் கடந்த யூலை மாதம் அமெரிக்காவிடம் கேட்டிருந்தது.

எனினும் ஈராக்கிய எதிர்க்கட்சிகள் சண்டைகள் இடம்பெறாத பிரதேசங்கள் எதுவும் இல்லை எனக் கூறி ஜப்பானின் வேண்டுகோளை நிராகரித்துள்ளன.

1945 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜப்பானியப் படைவீரர்கள் யுத்தப் பிரதேசங்களில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ம்னிதாபிமான உதவிகளை மாத்திரமே தங்களால் மேற்கொள்ள முடியும் என ஜப்பானிய அமைச்சரவைப் பேரவை தெரிவித்துள்ளார். (பி-2)

# பிறேஸில் கோப்பித் தோட்டத்தில் 800 அடிமைத் தொழிலாளரை அதிகாரிகள் மீட்டனர்

(பிறேஸிலியா)

உலக மயமாக்கலின் நவீன யுகத்தில் சம்பளமின்றி அடிமைகளாக நடத்தப்பட்ட 800 தொழிலாளர்கள் பிறேஸில் அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வாஹியா என்ற மாநிலத்தில் இருக்கும் கோப்பித் தோட்டத்தில் வேலை செய்து வந்தார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இத்தொழிலாளர்களுக்கு குடியிருப்புப் பகுதிகள் இல்லை, போதிய உணவுகள் வழங்கப்படவில்லை. இவர்களில் 70 பேர் கடுமையாக நோய்வாய்ப் பட்டுள்ளார்கள் என பிறேஸில் அதிகாரிகள் கூறுகின்றனர்.

1995 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இது போன்ற அடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். (பி-2)

# பாரிய தற்கொலைத் தாக்குதல் சாதுரியமாக முறியடிப்பு

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் நேற்று இடம்பெறவிருந்த பாரிய தற்கொலைக் குண்டுத்தாக்குதலைப் பாதுகாப்புப் படையினர் சாதுரியமாக முறியடித்துள்ளனர்.

காஷ்மீரில் அமைந்துள்ள பராதுருப்பினர் முகாம் மீது தற்கொலைக் குண்டுதாரியான முஸ்லிம் தீவிரவாதி ஒருவர் முதலில் இரு கைக் குண்டுகளை வீசியுள்ளார்.

இதனையடுத்துப் பாதுகாப்புப் படையினர் அத் தீவிரவாதி மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

இதனால், தீவிரவாதி அந்த இடத்திலேயே உயிரிழந்து விட்டார் என பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினரின் இந்த எதிர்த் தாக்குதல் மூலம் பரா துருப்பினர் முகாமைத் தாக்கமுயற்சித்த தீவிரவாதியின் பாரிய தொடர்த்தாக்குதலை முறியடிக்க முடிந்ததாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த முஸ்லிம் தீவிரவாதியுடன் மற்றொரு தீவிரவாத நபரும் இணைந்து வந்திருந்தார் எனவும்; அவர் தப்பிச் சென்றுள்ளார் எனவும் பாதுகாப்புப் படையினர் கூறுகின்றனர்.

இந்த முஸ்லிம் தீவிரவாதிகள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து எதுவும் தெரியவில்லை. (பி-2)

# ஈராக்கில் இடம்பெறும் தாக்குதல்களினால் அமெரிக்காவும் - இஸ்ரேலும் சுயலாபம் தேடிக்கொள்ள முயற்சிக்கின்றன

## ஹிஸ்புல்லா தலைவர் சாடுகிறார்

(பெய்ரூட்)

ஈராக்கில் கடந்த வாரம் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் மூலம் அமெரிக்காவும் இஸ்ரேலும் சுய இலாபத்தைத் தேட முயற்சிக்கின்றன.

இவ்வாறு லெபனானின் ஹிஸ்புல்லா போராளிக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஷியாம் முஸ்லிம் பிரிவுத் தலைவர் கொல்லப்பட்டார்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவரது அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும் திரளான ஷியாம் முஸ்லிம்கள் மத்தியில் பேசுகையிலேயே ஹிஸ்புல்லாப் போராளிக் குழுவின் தலைவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஈராக் அமைதியான ஒரு நாடாக இருப்பதை விரும்பாத அமெரிக்கா அதனைச் சீர்குலைக்க முயற்சிப்பதாகவும்,

ஈராக்கை நிர்மூலமாக்க வேண்டும் என்று இஸ்ரேல் செயற்படுவதாகவும் ஹிஸ்புல்லாத் தலைவர் ஷேக் ஹஷீர் நஸீரா கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் தலைவர்களைக் கொல்ல வேண்டும் என்பதே இஸ்ரேலின் திட்டம் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (பி-2)

# இந்தோனேஷியாவில் எரிமலை புகைப்பதால் மக்கள் இடம்பெயர ஆயத்தம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் புலொனெஸ் தீவின் 7 கிராமங்களில் வசிக்கும் மக்கள் அங்கிருந்து வெளியேற ஆயத்தமாகி வருகின்றனர்.

அந்தப் பகுதியில் இருக்கின்ற லிவோடோபி எரிமலை புகையைக் கக்க ஆரம்பித்துள்ளதை அடுத்து, வீடுகளில் இருந்து வெளியேறும் நடவடிக்கைகளை மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் முதல் எரிமலையின் சாம்பலால் வீடுகளும் மரங்களும் மூடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சூடான சாம்பல் பரவியதால் தாவரங்கள் கருகியுள்ள போதிலும், பொதுமக்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் பேராபத்துத் தடுப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

திடீரென எரிமலை வெடித்தால் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்தப் பிரதேச மக்களுக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக இந்தோனேஷியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பி-09)

# அவுஸ்திரேலியா தொடர்புகளைப் புதுப்பிக்கிறது

(கன்பரா)

இந்தோனேஷியாவின ஹோபாரஸஸ் இராணுவப் பிரிவினருடனான தொடர்புகளைத் தாம் மீண்டும் புதுப்பித்துள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

ஹோபார்ஸஸ் குழுவின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் காரணமாக அதனுடனான தனது தொடர்புகளை 1999ஆம் ஆண்டு ரத்துச் செய்திருந்த அவுஸ்திரேலியா, தற்போது பயங்கரவாதத்திற்கெதிரான போருக்கு உதவும் வகையில் தொடர்புகளைப் புதுப்பித்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஹோபார்ஸஸின் விசேட படையணி பயங்கரவாதத்திற்கு எதிரான படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பதனால், இந்தத் தொடர்பு தற்போது அவசியமாக இருப்பதாக அவுஸ்திரேலிய பாதுகாப்புப் படைத் தலைவர் பீற்றர் கொஷ்சூரோஸ் தெரிவித்துள்ளார். (பி-2)

# போருக்குப் பின்னர் ஈராக்கில் நடைபெறும் சம்பவங்களுக்கும் தமக்கும் தொடர்புமில்லையாம்

## சதாமின் புதிய ஒலிநாடாவில் தெரிவிப்பு

(ரியாத்)

போருக்குப் பின்னர் ஈராக்கில் இடம்பெற்றுவரும் கோரமான குண்டுத்தாக்குதல் சம்பவங்களுடன் தமக்கு எந்தவொரு தொடர்பும் இல்லையென சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைனினால் வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் ஒலி நாடா ஒன்றின் மூலமே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், ஈராக்கில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டுப் படையினர் மீது தாக்குதல்களைத் தொடுக்குமாறு அவர் தன் அதரவாளர்களைக் கோரியுள்ளார்.

அரேபியத் தொலைக்காட்சி ஒன்றின் மூலம் ஒளிபரப்பப்பட்ட இந்தச் செய்தியில், கடந்த வெள்ளிக்கிழமை நஜாப்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தமக்கோ, தமது ஆதரவாளர்களுக்கோ தொடர்புகள் எதுவும் இல்லை என அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)

# விடுவிக்கப்பட்ட இராணுவ வீரர் மீது மீண்டும் வழக்கு

பல வருடங்களுக்குமுன்னர் மனித உரிமைகளை மீறினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த முன்னாள் படைவீரர்கள் 80 பேருக்கு எதிரான வழக்கு விசாரணைகளை ஆஜர்டீன நீதிபதிகள் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்குகள் பொது மன்னிப்பு அடிப்படையில் கைவிடப்பட்டிருந்த போதிலும், பொது மன்னிப்புச் சட்டத்திற்குச் சவால் விடுக்கும் வகையில் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரையிலான இராணுவ ஆட்சிக்காலப் பகுதியில் மனித உரிமைகளுக்கு எதிராக புரியப்பட்ட குற்றச் செயல்களுக்கு எதிராகவே இந்த விசாரணைகளை நீதிபதிகள் ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் குற்றவாளிகளை ஸ்பெயினுக்கு நாடு கடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கைகூடாத நிலையில், அவர்களில் ஒரு குழுவினரை நீதிபதியொருவர் நேற்று முன்தினம் விடுதலை செய்த சிறிது நேரத்திலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. (பி-2)

உலக தரிசனம்

# பாதாளக் குழுத் தாக்குதலில் 11 பேர் ப்லியாகினர்

(டெகுசிகல்பா)

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஹோண்டு ராஸில் இரு பஸ்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 11 பேர் உயிரிழந்ததுடன், 17 பேர் காயமடைந்துள்ளனர்.

செம்பற்றோசூலா நகரிலேயே இந்தத் தாக்குதல் சம்பவ்ம் இடம்பெற்றுள்ளது.

மாஸ்க் எனப்படும் பாதாளக் குழு ஒன்றே இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (பி-2)

# மும்பையின் முக்கிய இரு இடங்களில் குண்டுகள் வெடித்ததில் 40 பேர் பலி

(மும்பை)

இந்தியாவின் மும்பை நகரில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 40 பேர் பலியாகியதுடன், 125இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

நகரின் அதிக ஜன நடமாட்டம் நிறைந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் ஒரு குண்டு வெடித்தது என்றும் மற்றையது இந்துக் கோயில் ஒன்றுக்கு அருகில் வெடித்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தினை அடுத்து, மும்பையில் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் 4 இடங்களில் குண்டுடிவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற போதும், இது குறித்து இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. (பி-2)

# வெண்கலப் பதக்கம் வென்றவருக்கு ரூ.25லட்சம் பரிசு

(சென்னை)

பாரிஸில் இடம்பெற்ற உலக தடகளப் போட்டியில் வெண்கலப் பதக்காத்தைப் பெற்றுக்கொண்ட சென்னை மத்திய சுங்கத்துறை அதிகாரியான அஞ்சு - பாபு ஜோர்ஜ்ற்கு 25 இலட்சம் ரூபா ரொக்கப் பரிசை முதலமைச்சர் ஜெயலலிதா வழங்குவதாக அறிவித்துள்ளார்.

அஞ்சுவின் பயிற்சியாளராகவிருக்கும் அவரது கணவர் பாபுஜோர்ஜிகு மூன்றேமுக்கால் இலட்சம் ரூபா ரொக்கப்பரிசு வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பி-2)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 30

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

01. ம. சிவறோஷன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
02. க. அகிலன்- வரணி மகாவித்தியாலயம்.
03. இ. இராஜப்பிரசாந்தன்- மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை.
04. த. சரண்யா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.
05. த. கிருத்தியா- வரணிமகாவித்தியாலயம்.
06. ப. சஞ்சிகா- சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்.
07. த. நீருஜா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
08. செ. மேரிராஜலீனா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
09. இ. இராஜப்பிரவிந்தன்- மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை.
10. கி. நிதர்சன்- வரணி மகாவித்தியாலயம்.
11. க. நிதர்சன்- யா/மத்தியகல்லூரி.
12. இ. பவீசன்- உடுவில் மகளிர் கல்லூரி.
13. பூ. திலக்ஷி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
14. ச. சோபிகா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை.
15. ஜி. அபர்ணா- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.
16. பா. துஷாந்தி- யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.
17. த. தேவப்பிரியன்- யா/ புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
18. செ. கலிஸ்ரா- நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை
19. சூ. ஸ்ரீபிரவீன்- யா/மத்திய கல்லூரி
20. சி. டினோஜன்- ஆவரங்கால் ந.இ.வித்தியாலயம்
21. லி. கருசன்- இணுவில் மதிய கல்லூரி
22. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்
23. ம. கலைமதி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
24. இ. அனுஷா- கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
25. வ. கீர்த்தனா- ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி
26. தி. அருந்தஷா- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
27. சு. ரேசிஜா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசால்ல
28. கு. சிரஞ்சீவன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
29. அ. பிறேமி- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
30. வே. சரண்ணியா- யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
31. சி. ஜோதிகா- யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
32. சி. காயத்திரி- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
33. செ. அருணன்- மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்
34. த. யதுர்ஷன்- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
35. இ. கோபிகிருஸ்ணன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
36. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
37. செ. நிஷாந்- இணுவில் மத்திய கல்லூரி
38. செ. சாருகா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
39. ம. கஜீவா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
40. க. கலீபன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
41. ஞா. தாரணி- யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
42. ம. இந்துஜா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
43. செ. திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
44. பா. மிரோஜா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
45. நே. லாவண்யன்-தாவடி இ.த.க. பாடசாலை
46. சா. ஆதவன்- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
47. மோ. சித்திராங்கன்- உடுவில் தந்தை செல்வா தொழில் நுட்பப் பள்ளி
48. க. வாணுஜா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
49. அ. ஜனதன்- யா/பரியோவான் கல்லூரி
50. இ. சௌமியா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
51. சி. ஜஜிதா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
52. இ. சிந்துஜா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
53. கோ. பிரதீபா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
54. பா. கிறிஸ்ரின்வேணி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
55. சி. பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
56. க. சிந்துஜன்- துன்னாலை மெ.த.க. பாடசாலை
57. ச. செரினா- யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
58. ச. லக்ஷிகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
59. இ. பிரியங்கா- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
60. செ. கலையரசி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்

102. கீ. அச்சுதன்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
103. கு. பிரணவன்- உடுப்பிட்டி அ.மி கல்லூரி
104. ச. சுவீபன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
105. த. விஜிதன்- கரவெட்டி இராமுப்பிள்ளை வித்தியாலயம்
106. இ. டணசிகா- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
107. வி. நிரோஜன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
108. செ. திலக்ஷன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
109. மு. கீதாயினி- புத்தகலட்டி ஸ்ரீவிஸ்னுவித்தியாலயம்
110. ம. காலியாங்கன்- ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்
111. ர. வினோஜினி- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
112. மோ. சோதீபன்- மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை
113. போ. ஆரணி- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
114. த. கோபிதாஸ்- அச்சுவேலி மத்திய கல்லூரி
115. வி. துஷ்யந்தன்- நயினை நாகபூசணி வித்தியாலயம்
116. அ. ராஜ்ஹரன்- கரணவாய் விக்கினேஸ்வராக் கல்லூரி
117. செ. அருள்ராஜ்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
118. நா. கீர்த்திகா- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
119. அ. அனோஜிதா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
120. சோ. தனஞ்சயன்- தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை
121. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
122. இ. சுதர்சினி- வரணி மகாவித்தியாலயம்
123. செ. ஆருணன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
124. ஆ. கஜீபன்- யா/மத்திய கல்லூரி
125. த. சன்சிகா- நவாலி மகாவித்தியாலயம்
126. கோ. பவப்பிரியசர்மா- இணுவில் மத்திய கல்லூரி
127. சி. மிரோஜினி- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
128. மு. நிரோஜா- அளவெட்டி அருணோதயக் கல்லூரி
129. இ. ஸ்ராலினி- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
130. இ. கிரிசாந்- யா/மத்திய கல்லூரி
131. கு. பிரசாந்- யா/மத்திய கல்லூரி
132. க. லக்ஷனா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
133. ஆ. நிரோஜினி- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
134. த. ஹரப்பிரியன்- உடுவில் மகளிர் கல்லூரி
135. ம. மதுஷா- நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
136. ஸ்ரீ. கஸ்த்தூரி- அச்சுவேலி மத்திய கல்லூரி
137. செ. ராஜ்குமரன்- சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை
138. அ. கனிஸ்ரா- உருப்பிராய் றோ.க.த.க. பாடசாலை
139. இ. நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
140. சு. நிஷாந்தினி- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
141. ஜெ. நிரோஜினா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
142. கு. கிதுர்ஷன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
143. வி. அமலா- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாசாலை
144. ச. சஜிதீப்- சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்
145. ம. மதரூபன்- நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
146. பி. டிபன்ராஜ்- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
147. வி. கல்யாணி- வல்வை றோ.க.த.க.பாடசாலை
148. செ. வினோதா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
149. ச. அனுஷா- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்திய...
150. சு. நிலக்ஸன்- யா/மத்திய கல்லூரி
151. ப. சிவ்ருக்ஷி- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
152. யோ. சரண்யா- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
153. செ. றகீம்டீநெல்சன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
154. வி. கஸ்தூரி- வல்வை றோ.க.த.க பாடசாலை
155. க. விஸ்ணுவர்த்தன்- யா/பரியோவான் கல்லூரி

### பல்கலை ஊழியர் போராட்டத்தினால்

# இடைநிறுத்தப்பட்ட பரீட்சைகள் அடுத்த வாரம் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக 2003 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ கற்கையியல் வணிகபீடம் மற்றும் கலை, விவசாயபீடப் பரீட்சைகள், விரிவுரைகள் ஆகியன அடுத்தவாரம முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பல்கலைககழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இந்த வகையில் முதலாம் வருட திகதியும் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-18)

## மல்லாகம் ம.விக்கு காணி அன்பளிப்பு

(கந்தரோடை)

மல்லாகம் கனிஷ்ட மகா வித்தியாசாலையில் நீண்டகாலமாக நிலவிவரும் இடப்பற்றாக்குறையைக்

## வினாத்தாள் 30-ன் விடைகள்

01 இல்லை
02. இல்லை
03. 30.06.2003
04. யாழ்ப்பாணம்
05. தேவிகாமணியம்
06. நந்து பாலேந்திரா-உ/த சித்தி இல்லை,வரன்கந்தசாமி ஆங்கிலஅறிவு, இன்மை- வதிவிடம்-முகமாலை
07. எழுதுநர்
08. பிறந்ததிகதி
09. கணனி
10. அனுபவம்
11. திரு. கந்தசாமி ரமணன்
12. இல 40, ஆஸ்பத்திரிவீதி,யாழ்ப்பாணம்
13. 10.07.1975
14. 26ஆண்டு,11மாதம்,20 நாள்
15. இந்து
16. ஆண்
17. 8ஆண்டுகள்
18. யாழ்.உயர் தொழில் நுட்ப கல்லூரி,யாழ்ப்பாணம்
19. திருமணமாகாதவர்
20. க.பொ.த. (உ/த) சித்தி
21. கணனி இயக்குநர்
22. C
23. (1) B, C (2) A
24. மண்
25. ஒலிவ்
26. மண்,நீர்,வளி,போசனை
27. நான்கு
28. திசையறிகருவி
29. முக்கோணம்
30. $9Cm^2$
31. நீர்  32. வானம்
33. நிலம்  34. நீர்
35. செல்வி க.வடிவாம்பிகை
36. திருமதி அன்னலட்சுமி இராசதுரை
37. பொருத்தமான விடை
38. பொருத்தமான விடை
39. காபோவைதரேற், புரதம்
40. மாம்பழம்
41. Karish Biscuit
42. தகரத்தில் அடைத்த மீன்
43. பாதுகாப்பு,சேமிப்பு
44. 269.00/-
45. ஆறுமுகம் குடும்பம்
46. கரட்  47. Kg
48. கரட்
49. 52வாரம்= 365 நாட்கள்
50. 110 ரூபா
51. சமாந்தரக்கோடு
52. நேர்கோடு
53. சரிந்த கோடு
54. நிலைக்குத்துக்கோடு
55. வளைகோடு
56. 5,2  57. 4  58. 3
59. 2  60. 1
61. தாதி
62. Farmer
63. காலை உணவு
64. Volley Ball
65. கடிதம்
66. Nose
67. Ear
68. Tounge
69. Eye & Ear
70. Skin
71. இஸ்லாமியர்

38. செ. சாருகா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
39. ம. கஜீவா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
40. க. கலீபன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
41. ஞா. தாரணி- யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
42. ம. இந்துஜா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
43. செ. திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
44. பா. மிரோஜா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
45. நே. லாவண்யன்-தாவடி இ.த.க. பாடசாலை
46. சா. ஆதவன்- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
47. மோ. சித்திராங்கன்- உடுவில் தந்தை செல்வா தொழில் நுட்பப் பள்ளி
48. க. வாணுஜா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
49. அ. ஜனதன்- யா/பரியோவான் கல்லூரி
50. இ. சௌமியா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
51. சி. ஜஜிதா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
52. இ. சிந்துஜா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
53. கோ. பிரதீபா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
54. பா. கிறிஸ்ரின்வேணி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
55. சி. பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
56. க. சிந்துஜன்- துன்னாலை மெ.த.க. பாடசாலை
57. ச. செரினா- யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
58. ச. லக்ஷிகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
59. இ. பிரியங்கா- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
60. செ. கலையரசி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
61. த. தபோஜனன்- இணுவில் மத்திய கல்லூரி
62. கு. கோபிராம்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
63. த. கௌரி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
64. ந. துஜிகா- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
65. க. விபிஜா- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
66. சி. கெஜரூபன்- தாவடி இ.த.க. பாடசாலை
67. யோ. வசந்தன்- உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி
68. ர. மயூரி- மானிப்பாய் மெமோறில் ஆங்கிலப் பாடசாலை
69. ஈ. கோபிதன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
70. கு. கௌதமன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
71. க. கோபிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
72. ம. கீர்த்திகன்- இணுவில் மத்திய கல்லூரி
73. ந. ப்விதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
74. ச. அருண்- இணுவில் மத்திய கல்லூரி
75. ப. தர்மிளா- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
76. ர. சாம்பவி- சுன்னாகம் ராமநாதன் கல்லூரி
77. ச. றஜீதா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
78. வே. நிருஜன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் (C/6450)
79. க. செல்வி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
80. அ. யேசுகி- நவாலி மகாவித்தியாலயம்
81. பா. கௌசிகன்- உரும்பிராய் இராமநாதன் மகாவித்தியாலயம்
82. ச. சுவஸ்திகா- இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை
83. கே. சோபனா- அளவெட்டி அருணோதயக் கல்லூரி
84. பொ. கோகிலன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
85. ப. நேசகிருஸ்ணா- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
86. ச. சண்மதுரன்- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
87. அ. சுகிர்தன்- யா/மத்திய கல்லூரி
88. சி. சிவனேசன்- மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை
89. கீ. கரிசினி- ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாசாலை
90. ஜெ. சயந்தன்- வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயம்
91. பு. கிருசா- நவாலி மகாவித்தியாலயம்
92. க. சாமளா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
93. கு. ஜெய்சினி- உஷன் இராமநாதன் மகாவித்தியாலயம்
94. இ. பிரசாந்- வதிரி இருதயக் கல்லூரி
95. ர. யுதுர்சன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
96. சி. சிவராகவன்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
97. வ. சதுர்சன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
98. சு. அருளினி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
99. ச. திவிஜன்- உடுவில் மகளிர் கல்லூரி
100. கு. சஞ்சிகா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
101. த. சிவதா[illegible]- கரவெட்டி இராமுப்பிள்ளை வித்தியாலயம்

153. [illegible] உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
154. வி. கஸ்தூரி- வல்வை றோ.க.த.க பாடசாலை
155. க. விஸ்ணுவர்த்தன்- யா/பரியோவான் கல்லூரி

### பல்கலை ஊழியர் போராட்டத்தினால்

# இடைநிறுத்தப்பட்ட பரீட்சைகள் அடுத்த வாரம் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ.பல்கலைக்கழக 2003 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ கற்கையியல் வணிகபீடம் மற்றும் கலை, விவசாயபீடப் பரீட்சைகள், விரிவுரைகள் ஆகியன அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பல்கலைககழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இந்த வகையில் முதலாம் வருட 2ஆம் அரையாண்டிற்கான கலை, மற்றும விவசாய பீட விரிவுரைகளும், வணிகபீட தொழில் நிர்வாகமாணி/வணிகமாணி பரீட்சைகளும் எதிர்வரும் 8அம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இடைநிறுத்தப்பட்ட விவசாய பீடப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதியும், 2ஆம் அரையாண்டிற்கான கலைப்பீடப் பரீட்சைகள், மற்றும் வணிகபீட தொழில் நிர்வாகமாணி/வணிகமாணி பகுதி-II பரீட்சைகள் எதிர்வரும் 16ஆம் திகதியும் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-18)

## மல்லாகம் ம.விக்கு காணி அன்பளிப்பு

(கந்தரோடை)

மல்லாகம் கனிஷ்ட மகா வித்தியாசாலையில் நீண்டகாலமாக நிலவும் இடப்பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, பாடசாலையின் பழைய மாணவனும் இலங்கை வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளருமான சி.விக்னராசா ஒரு இலட்சம் ரூபா செலவில் காணிஒன்றைக் கொள்வனவு செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இக்காணியில் நூலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளில் பாடசாலை நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. (உ-103)

45. ஆறுமுகம் குடும்பம்
46. கரட் 47. Kg
48. கரட்
49. 52வாரம்= 365 நாட்கள்
50. 110 ரூபா
51. சமாந்தரக்கோடு
52. நேர்கோடு
53. சரிந்த கோடு
54. நிலைக்குத்துக்கோடு
55. வளைகோடு
56. 5,2 57. 4 58. 3
59. 2 60. 1
61. தாதி
62. **Farmer**
63. காலை உணவு
64. **Volley Ball**
65. கடிதம்
66. **Nose**
67. **Ear**
68. **Tounge**
69. **Eye & Ear**
70. **Skin**
71. இஸ்லாமியர்
72. இந்துக்கள்
73. கிறிஸ்தவர்
74. பௌத்தர்
75. இந்துக்கள்

76-81 வரையிலான வினாக்களுக்கு பொருததமான எழுவாய் பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக்குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

# அரசின் அபிவிருத்தித் திட்டங்களை பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்க்கும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆரம்பித்துள்ள ஆயிரத்து 500 கோடி ரூபா செலவிலான புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு பொது ஜன ஐக்கிய முன்னணி எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளது.

அண்மையில் இடம் பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் மாகாண சபை முதலமைச்சர்கள் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவதுடன், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை அரச மாகாண சபைகள் ஊடாகவே முன்னெடுக்க வேண்டும்.

மாகாண சபைகள் ஊடாக திட்டங்களை முன்னெடுக்கத் தவறின் வெகு விரைவில் பூர்த்தி அடையவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் தாமதம்அடையும் எனவும்அக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. (தி)

## 130 வீட்டுத் திட்டம் துரித கதியில் அமுல்

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் ,நிறுவன நிதி அனுசரணையுடன்,தமிழர் புனர் வாழ்வுக் கழகம் 130 வீட்டுத் திட்டத்தை நாவாந்துறைப் பிரதேசத்தில் துரிதமாக அமுல் செய்து வருகின்றது.

மீளக்குடியமர முடியாது வீடுகளின்றி அவதிப்படுகின்ற இப்பகுதி மக்களுக்கு இவ் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொன்றும் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் வீடுகள் மாரி காலத்திற்கு முன்னதாகக் கட்டி முடிக்கப்பட்டுவிடுமென சம்பந்தப்பட்ட தரப்புகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (உ-4)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 32 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

### விழித்தெழுவீர்!

### சூழலைப் பாதுகாப்போம்

### சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் வழிமுறைகள்

- காடுகளை அழிப்பதை தடைசெய்ய வேண்டும்.
- வீட்டிற்கு இரண்டு மரங்களை வளர்க்க வேண்டும்.
- நகரங்களில் இருக்கும் தொழிற்சாலைகளை நகரங்களில் இருந்து வெளியே அமைத்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும்.
- தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் தீங்கு விளைவிக்கும் புகை மற்றும் இரசாயனத்தைக் குறைக்க வேண்டும்.
- வீடுகளில் உள்ள குப்பைகளை உரிய இட்த்தில் போடவேண்டும்.
- தொழிற்சாலைகளில் இருந்து வரும் இரசாயனக் கழிவுகள் நீர்நிலைகளில் சேர்வதற்கு தடை விதிக்க வேண்டும்.

*- சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைப்பு-*

1) இங்கு காட்டப்பட்டுள்ளது.
 1) விளம்பரம் 2) சுவரொட்டி 3) துண்டுப் பிரசுரம் 4) அழைப்பிதழ்

2) இது வலியுறுத்தும் பிரதான கருத்து.
 1) மரப்பாதுகாப்பு 2) சூழல் பாதுகாப்பு
 3) கழிவுகளின் பாதுகாப்பு 4) கழிவுகால்வாய்களின் பாதுகாப்பு

3) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "விழித்தெழுவீர்" என்பதன் கருத்து
 1) அதிகாலையிலேயே நித்திரை விட்டெழல்
 2) எப்போதும் விழிப்பாக இருத்தல்
 3) சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றித் தெளிவான விளக்கத்துடன் செயற்படல்
 4) சூழல் பாதுகாப்புப் பற்றி சபையோருக்கு எடுத்துச் சொல்லல்

4) கீழ்வரும் செயற்பாடுகளில் எது சூழல் பாதுகாப்புடன் ஒத்துப் போகின்றது.



(1) (2) (3) (4)

5) கீழ்வரும் கூற்றுக்களுள் எது மேலே தரப்பட்டுள்ள கருத்துடன் ஒத்துப் போகின்றது.
 1) பாரிய தொழிற்சாலைகளை நகரங்களில் அமைத்தல்
 2) வீடுகளில் காணப்படும் பெரிய மரங்களைத் தறித்தல்
 3) வீட்டுக் கழிவுகளை வீட்டுக்கண்மையில் கொட்டுதல்
 4) வீட்டைச் சூழ்ந்து காணப்படும் திறந்த நிலையில் நீண்ட காலமாக நீர் தேங்கியுள்ள பாத்திரங்கள், சிரட்டைகளை அழித்தல்

❋ **கீழ்வரும் சொற்களின் பொருள் தரும் சொற்கள் மேலே உண்டு. அவற்றைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக?**

6) வனம்:.................... 7)விருட்சம்:....................
8) தகுந்த:.................... 9)அபாயம்:....................

❋ **கீழ்வரும் சொற்களின் எதிர்ப்பொருள் தரும் சொற்களை மேலே உள்ள சொற்களில் இருந்து தெரிவுசெய்து எழுதுக?**

10) ஆக்குதல்:.................... 11)பாவனை:....................
12) கிராமம்:.................... 13)அதிகரித்தல்:....................

❋ **தரப்பட்ட சொற் கூட்டத்தில் உள்ள ஒருமைச் சொற்களைக் கூட்டுக்கு வெளியே எடுத்து எழுதுக?**

| குப்பைகளை, மரங்களை, காடு, இடத்தில், வீட்டை | .................... |

❋ **கீழ்வரும் சொற்களில் ஒன்று வினைச்சொல்லாகும். அச்சொல்லை வெளியே எடுத்து எழுதுக?**


| புகை, வீடு, மரம், அழித்தான் | .................... |

❋ **மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.**

16) ஜப்பான் நாட்டின் தலைநகர்ம்
 1) புதுடில்லி 2) டோக்கியோ 3) ஸ்ரீஜயவர்த்தனபுர 4) திம்பு

17) மத்திய மாகாணத்தில் உள்ள நகரம்
 1) யாழ்ப்பாணம் 2) கொழும்பு 3) கண்டி 4) குருநாகல்

18) காற்றினால் இயக்கப்படக்கூடிய இசைக்கருவி




(1) (2) (3) (4)

19) 

அருகே உள்ள படத்தின்மூலம் வெளிக்காட்டப்படும் அமைப்பு யாது?
 1) காற்றாடி 2) காற்றுவேகமானி
 3) அமுக்கமானி 4) காற்றுத்திசைகாட்டி

20) 


அருகே காட்டப்பட்டுள்ள கருவிகளின் பயன்பாடு
 1) காற்றடித்தல் 2) மருந்துவிசிறுதல்
 3) எண்ணெய்ச்சேமிப்பு 4) தீயணைத்தல்




- வாகனங்கள் செல்லலாம்
- வாகனங்கள் செல்ல முடியாது.தரித்து நிற்கவும்
- புறப்பட ஆயத்தமாகுக.


மேலே உள்ள படத்தில் வீதிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் வீதிச் சமிக்ஞை மின் விளக்கும், அவை மூலம் வெளிப்படுத்தப்படும் கட்டளைகளும் தரப்பட்டுள்ளன. ஆனால் இவை ஒழுங்கு முறைப்படி தரப்படவில்லை. கீழே தரப்பட்டுள்ளவாறான மின்குமிழ் ஒளிர்வுகள் வெளிப்படுத்தும் கட்டளைகளை எழுதுக.

21) சிவப்பு விளக்கு ஒளிர்தல் ....................
22) சிவப்பு விளக்குடன் மஞ்சள் விளக்கும் ஒளிர்தல் ....................
23) பச்சை விளக்கு ஒளிர்தல் ....................

24) 


சில வேளைகளில் படத்தில் உள்ளவாறு சிவப்பு வெளிச்சத்துடன் பச்சை அம்பு வெளிச்சமும் காணப்படும்.இவ்வாறு தென்படும் போது யாது செய்தல் வேண்டும்? ....................

25) விளக்குகளினால் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு கட்டுப்படுத்தப்படுவது போன்று வேறு எம்முறையால் வீதிப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்படுகின்றது?
....................

26) 
பெயர்:....................
பயன்:....................

27) 
பெயர்:....................
பயன்:....................

28) 
பெயர்:....................
பயன்:....................

29) 
பெயர்:....................
பயன்:....................

30) 
பெயர்:....................
பயன்:....................

❋ **கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி ) என்றும் பிழையாயின் (பிழை) என்றும் எதிரே உள்ள கூட்டுக்குள் அடையாளமிடுக.**

31) பொருட்களுக்கான விளம்பரம் அப்பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் ☐
32) கிராமங்களை விட நகரங்களில் குறைந்தளவு வசதிகளே காணப்படுகின்றன ☐
33) அமாவாசையன்று இரவில் சந்திரனின் முழுமையான பிரகாசமான பாகத் தைக் காணலாம் ☐
34) எல்லாவகையான பூச்சி இனங்களும் தாவரங்களுக்கு தீமையையே விளை விக்கின்றன. ☐
35) துவிச்சக்கர வண்டி ஓட்டும்போது தலைக்கவசம் அணிதல் வேண்டும் ☐

❋ **36-40 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக?**

36) 20Cm, அகல, உயரம் உடைய திண்மக் குற்றியொன்று சமநீளமுடையதாக இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. கீழ்வரும் சந்தர்ப்பங்களில் வழங்கத் தக்க கணிதப் பெயரை எழுதுக.
1) வெட்டுவதற்கு முன்னர்:.................... 2) வெட்டிய பின்னர்....................


37) சீரான சுற்றுப் பருமன் உடைய் பனைமரம் ஒன்றின் முனைகள் ஒழுங்காக இருக்கத்தக்க வாறு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு வெட்டப்பட்ட குற்றிகளுக்கு வழங்கத்தக்க கணிதப் பெயர் என்ன? ....................

38) ஒரு கடுகதி பஸ் பண்டியின் வேகம் மணித்தியாலத்திற்கு 45 கிலோமீற்றர் ஆகும். இவ்வாகனம் 2 3/4 மணித்தியாலம் ஓடியது எனின், அது பயணம் செய்த தூரத்தைக் காண்க....................


39) குமார், தனது சம்பளத்தின் 1/2 பகுதியை உணவுக்காகவும், 1/4 பகுதியை ஆடை வாங்கவும் செலவுசெய்துவிட்டு மிகுதியை சேமிப்பிலிட்டான். அவனுடைய சம்பளம் ரூபா 4800 எனின் அவன் ஆடைவாங்க செலவுசெய்த பணம் எவ்வளவு ரூபாய்?
....................

40) "தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்துத்தொண்ணூற்றொன்பது" என்னும் எண்ணை இலக்கத்தில் எழுதுக?....................


❋ **பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள படங்களை அவதானித்துச் சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக?**

41) 



கமலாவும் விமலாவும் அரையாண்டுப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் விபரததை வரைபு காண்பிக்கின்றது. கமலா விமலாவை விட 60 புள்ளிகள்குறையப் பெற்றாள்.எனின் விமலாபெற்றபுள்ளி கள் எத்தனை?....................

42) 


இந்தத் தராசை கிடையாகச் சமப்படுத்த எவ்வளவு நிறையை எந்தப் பக்கத்திற்குக் கூட்டுதல் வேண்டும்
....................

43) 

அருகே காட்டப்பட்டுள்ள கடிகாரம் 18 நிமிடங்கள் பிந்தி ஓடு கின்றது. எனின், இப்போதுள்ள சரியான நேரம் என்ன?
....................

44) 


A,B,C,D எனும் நான்கு வியாபாரிகள் பெற்ற இலாபம் வரைபாக்கப்பட்ட போது, அமைந்த வரைபுகளையே அருகே காண்கின்றீர்கள். இவர்களில் அதிகளவு இலாபம் பெற்ற வியா பாரியின் பெயரையும், குறைந்தளவு இலாபம் பெற்ற வியாபா ரியின் பெயரையும் எழுதுக?
அதிக இலாபம் பெற்றவர்?....................
குறைந்தளவு இலாபம் பெற்றவர்?....................

45) 

அருகில் தரப்பட்ட கூட்டற் பிரசினத்தில் △ இனால் ஓர் எண்ணும் ☐ இனால் ஓர் எண்ணும் காட்டப்பட்டுள்ளது.எனின் △ இனதும் ☐ இனதும்பெறுமானங்களை எழுதுக?
☐=.................... △ =....................

❋ **கீழ்வரும் வாக்கியங்களில் ஒருசொல் பொருத்தமற்று அமைந்துள்ள. அதன்கீழ் கோடிடுக/ வெட்டிவிடுக**

46) இலங்கைவாழ் மக்கள் (தரைவழி, வான்வழி, செய்மதி வழி) பிரயாணங்களை மேற்கொள்கின்றார்கள்.
47) விளம்பரதாரர்கள் பெரும்பாலும் (தொலைக்காட்சி, தொலைபேசி, வானொலி, பத்திரிகையூடாக) விளம்பரம் செய்கின்றார்கள்.
48) மாணவர்கள் தாம் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு (மீளமீளக் கற்றல், அதிகளவு பயிற்சிகளைச் செய்தல், பார்தெழுதல்) என்பன நன்று.
49) பிரதான வீதிகளைக் கடப்பதற்கு (மேம்பாலம், சுரங்கவழி, பாதசாரிக் கடவை) என்பன அமைக்கப்பட்டிருக்கும்.
50) நல்ல நண்பர்களாக வாழ்வதற்கு(அன்பு, விட்கொடுக்கும் மனோபாவம், சந்தேகம், புரிந்துணர்வு) என்பன அவசியம்.

❋ **சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

51) இரு எண்களைப் பெருக்கும்போது கிடைப்பது 12. அவ்விரு எண்களையும் கூட்டும்போது கிடைப்பது 7. அவ்விரு எண்களும் எவை?....................
52) ஒரு விருந்துபசாரத்தில் மொத்தமாக 80 பேர் பங்குபற்றினார்கள்.அதில் ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை 24 அதிகமாகும். எனவே அங்கு காணப் பட்ட ஆண்களின் எண்ணிக்கை யாது?....................
53) ஒரு செவ்வக வடி மைதானத்தின் நீளம் 250 மீற்றர். அகலம் 150 மீற்றர் இதன்சுற்றளவு எத்தனை மீற்றர்?....................
54) நந்துவின் நிறை 26Kg 500g, சுந்து, பிந்து இருவர்களினதும் நிறைகள் சமன்.நந்து, சுந்து, பிந்து மூவரினதும் நிறை 82Kg 200g எனின் பிந்துவின் நிறை என்ன?....................
55) ஒரு நாடகம் மண்டபம் நிறைந்த காட்சியாக மூன்று நாட்கள் காண்பிக்கப்பட்டபோது, 909 பேர் பார்வையிட்டனர். இதே நாடகத்தை 5 நாட்கள் மண்டபம் நிறைந்த காட்சியாக காண்பித்தால் எத்தனை பேர் பார்வையிடுவர்?....................

❋ **கீழே தரப்பட்டுள்ள ஆங்கில சொற்களின் சரியான கருத்தினை வெளிப்படுத்தும் தமிழ்ச் சொல்லை எழுதுக.**

**56) MEDICINE.................... 57) FRIEND.................... 58) SISTER:....................**
**59) MOTHER.................... 60) GREEN.................... 61) HOSPITAL....................**

❋ **கீழே தரப்பட்டுள்ள தமிழ் சொற்களின் சரியான கருத்தினை வெளிப்படுத்தும் ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

62) பற்பசை 63) பாடசாலை 64) தபாலுறை 65) மருத்துவர்
.................... .................... .................... ....................

❋ **நீரானது ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு கொண்டுசெல்லப்படலாம். இவ்வாறு கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தக்கூடிய பொருட்தொகுதி கீழே உண்டு. அவற்றில் பொருத்தமானவற்றை வினாவுக்கு ஏற்ப தெரிவுசெய்து அது குறிக்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக?**



66) நிலத்தில் ஊற்றப்பட்ட நீரை அகற்ற உகந்தது? (-----)
67) உயரமான இடத்திலிருந்து நீரைப் பதிவான இடத்திற்கு கொண்டுசெல்ல உகந்தது?(-----)
68) குளிர்பானம் கொண்ட கோப்பையில் இருந்து பானத்தைச் சிறிது சிறிதாகக் குடிப்பதற்கு ஏற்றது? (-----)
69) சூடான கோப்பி அருந்த உகந்தது (-----)
70) கிணற்று நீரைத்தென்னை மரத்துக்குக் கொண்டுசெல்லஉகந்தது ? (-----)

❋ **சுருக்கமான விடை தருக?**

71) மனிதனின் அடிப்படைத் தேவைகள் எவை?....................
72) ஒளி முதல் என்றால் என்ன....................

மாம்பழம் போக்குவரத்தின் போது பழுதடைவதுண்டு. இதைத் தவிர்க்க கையாளக்கூடிய வழிமுறைகள் மூன்று தருக? 73).................... 74).................... 75)....................

❋ **"நான் பார்த்து மகிழ்ந்த தேர்த்திருவிழா..." என்னும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலையுடன் அமைந்த ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் 4சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.**

# வடக்கு-கிழக்கைப் பிரிக்கும் ஜனாதிபதியின் முயற்சி இந்தியாவின் கௌரவத்திற்குப் பெரும் வீழ்ச்சி

## அ.இ.த.கா.செயலாளர் நாயகம் கருத்து

(கொழும்பு)

கொழும்பில் வசிப்பவர்களைப் போல் சுகபோக வாழ்க்கையை எமது களப் போராளிகள் வாழவில்லை. அவர்களது தியாகத்திற்கும் எமது இழப்புகளுக்கும் ஏற்றதோர் தீர்வு கிடைக்க முடியுமாயின், அதை தமிழீழ விடுதலைப்புலிகளால் மட்டுமே பெற்றுத்தர முடியும்.

கொழும்பு தமிழ்ச்சங்க் வினோதன் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற ஜோதிலிங்கத்தின் 'இனப்பிரச்சினையும்-ஒப்பந்தங்களும்-தீர்வுகளும்' எனும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் செயலாளர் நாயகம் கலாநிதி நல்லையா குமரகுருபரன் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மாற்றுக் கருத்துகளுக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்று கூறுபவர்களால் கடந்த காலங்களில் எமக்கு எதைப் பெற்றுத்தர முடிந்தது?

ஒன்றைமட்டும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். புலிகளின இராஜதந்திர அரசியல் வெற்றியே எம் தமிழினத்தின் வெற்றி. புலிகளை விடுத்து எமக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்காது. நாம் ஏமாற்றப்பட்டதே இதுவரை வரலாறு. புலிகள் வாழ்ந்தால் எமக்கு விமோசனம் உண்டு.

ஜனாதிபதியின் வடக்கு-கிழக்கு பிரிப்பு முயற்சியில் தலையிட வேண்டாம் என சிஹல உறுமய இந்தியாவைக் கோரியுள்ளது.

இலங்கை-இந்திய உடன்படிக்கையில் இன்றும் உயிர்ப்புடன் இருப்பது வடக்கு-கிழக்கு ஓரலகு என்கின்ற அம்சம் மட்டுமே.

இதனையும் உடைத்தெறிய முயல்வது சமாதானத் திட்டத்தை முறியடிக்கும் செயல் மட்டுமன்றி, இந்தியா ஏற்படுத்திய 13வது அரசியல் திருத்தத்திற்கு ஏற்பட்ட தோல்வியுமாகும்.

எனவே, வடக்கு-கிழக்கைப் பிரிக்க இந்தியா இணங்க முடியாது. அது அவர்களுக்கு கௌரவப் பிரச்சினை என்பதை அரசியல் கற்றுக்குட்டிகளான சிஹல உறுமய புரிந்துகொள்ள முடியாது.

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம்பற்றி அன்று முன்னுரைத்த ஜனாதிபதி, இன்று வடக்கு-கிழக்கைக் கூறுபோட எண்ணுவது சுயலாபம் கருதியே.

முஸ்லிம் காங்கிரஸில் உள்ள அதாவுல்லா தவிர, வேறு எவரும் வடக்கு-கிழக்கைப் பிரிப்பதில் உடன்பாடு கொண்டிருக்கவில்லை. எனவே ஜனாதிபதியின் இந்த முயற்சி பலிக்காது.

தனது அதிகாரத்தை வெளிக்காட்டும் நோக்கில், நடைமுறைக்கொவ்வாத வகையில் ஜனாதிபதி வெளியிடும் பிதற்றல்களில் வடக்கு-கிழக்குப் பிரிப்பும் ஒன்று என்றார். (உ)

# வெளிச் சக்திகளின் கைக்குள் சிக்கியுள்ளது இன்றைய அரசு

## பொ.ஐ.மு.பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு)

தற்போது பதவியில் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்குப் பதிலாக 15 வெளிநாட்டவர்களே கொண்டு நடத்துகின்றனர் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற கட்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

அரசின் இந்த இயலாத்தனத்தால் நாட்டின் தன்மானத்திற்கும், சுதந்திரத்திற்கும் இழுக்கு ஏற்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கண்டி மாவட்டத்தில் பாரிய அளவிலான சேவைகளை ஆற்றிய போதிலும், தற்போதைய அரசு இம்மாவட்டத்திற்கு எந்தவித உதவியையும் இதுவரை செய்யவில்லை. செயயும் உத்தேசமும் இல்லை.

கடந்த ஆட்சிக்காலத்தில் இம்மாவட்டத்தில் பிரபல அமைச்சர்கள் பலர் இருந்தனர். ஆனால், தற்போது இம்மாவட்டத்தில் அமைச்சர் ஒருவரே உள்ளார்.

ஆனால் அவரும் வேறு மாகாணங்களுக்குச் சேவையாற்றி வருவதிலேயே கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த அமைச்சருக்கு வாக்களித்த மக்கள் அடுத்த பொதுத் தேர்தலில் அவருக்கு உரிய பாடம் [illegible] எனவும் அவ[illegible] மேலும் தெரிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கில் கண்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் [illegible] தென்னக்கோன், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுருத்த ரத்வத்தை, கட்சியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜயரட்ண உட்பட கட்சிப்பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.(தி)

# சிறுவர் உளநல நாடக எழுத்துருவாக்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்கம் (Active Theatre Movement) ஆர்வலர்களிடையே சிறுவர் நாடக' எழுத்துருவாக்கப் போட்டியை நடத்தவுள்ளது.

எழுத்துருவின் கருப்பொருள் சிறுவர் உளநல மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட விடயங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

இவ் எழுத்துருவை எழுதுபவர்கள், எழுத்துரு சிறுவர் உளப்பாங்கிற்கு ஏற்ப 30 நிமிடங்கள் ஆற்றுகை செய்யக்கூடியதாகவும், சிறுவர் பார்வையாளர்களை இலக்காகவும் கொண்டு எழுதப்படல் வேண்டும்.

எழுத்துருவை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக செயல்திறன் அரங்க இயக்கம், 'அருள்கம்' ஆடிய பாதம்வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலமோ நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும் எனவும், போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு படைப்பாளியும் தம் சுய விபரத்தை தனியே ஒரு தாளில எழுதி அனுப்புதல் வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்கு பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.(உ)

# எரிபொருட்களின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம்

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை அதிகரிப்பு உள்ளூர் சந்தைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிப்பதனால் மசகு எண்ணெய் கொள்வனவு செய்யும் போது கூடிய விலையைச் செலுத்த வேணடியுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த நிலைமையின் கீழ் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமென பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தஹாம் விமலசேன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்னும் ஓரிரு நாடகளில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

மசகு எண்ணெய் விலை அதிகரிப்பினால் ஏற்படும் நட்டத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமாயின், எரிபொருட்களின் விலையை குறைந்த பட்சம் 2ரூபாவினால் அதிகரிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் எரிபொருட்களின் விலை அதிகரிப்புக்கு அரசாங்கம் அனுமதி வழங்குமா என்பது குறித்து தம்மால் கூறமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# அரச தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

அரச தேர்தல் ஆணைக்குழு உடனடியாக நியமிக்கப்பட வேண்டும என தேர்தல் முறையினை மாற்றி அமைப்பது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ,தெரிவுக்குழுவின் தலைவர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்புச்சபை, தேர்தல் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்து ஜனாதிபதியின் அனுமதிக்காக அனுப்ப வேண்டும்.

ஆனால்; அரசியல் யாப்புச்சபை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை ஜனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பி வைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ஜனாதிபதி அதற்கு அனுமதி வழங்கவில்லை என் ஜனாதிபதியின் ஊடகப்பணிப்பாளர் நாயகம் ஜனதாஸ் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவுக்காக சிபார்சு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களில் ஒருவர் குறித்து ஜனாதிபதி நம்பிக்கை கொள்ளவில்லை எனவும். இதனாலேயே அனுமதியினை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் புதிய உறுப்பினரைச் சிபார்சு செய்யும் பட்சத்தில் தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்க முடியும்.

இதேவேளை, தேர்தல் ஆணைக் குழுவுக்கான உறுப்பினர்களை கட்சிகளே தெரிவுசெய்தன. இதனால் உறுப்பினர்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமானால் கட்சிகளே முடிவுகளை எடுக்கவேண்டும் என சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

எனினும், ஒரு உறுப்பினர் காரணமாக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவில்லை என்றால் அது நியாயமற்ற செயல்.

குறிபபாக அடுத்தவருடம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் எந்த நிர்வாகத்தின்கீழ் நடைபெறவேண்டும் என்பதில் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

அரச தேர்தல் ஆணைக்குழு நியமி[illegible] யாளர் திணைக்களத்தின் ஊடாகவே தேர்தல் நடைபெறும் என தினேஷ குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# எதிர்க்கட்சிகள சமாதானத்தைக் குழப்பினாலும் பிரதமர் அதனை நிலைநாட்டியே தீருவார்

## சமூகசேவைகள் நலன்புரி அமைச்சர்

(கொழும்பு)

எதிக்கட்சிகள் சமாதானத்தைக் குழப்பியடிக்க எந்த முயற்சிகளைச் செய்தாலும், எத்தகைய போராட்டங்களை நடத்தினாலும், ஐக்கியதேசிய முன்னணி அரசு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தியே தீரும்.

சமூகசேவைகள் நலன்புரி அமைச்சர் ரவீந்திர சமரவீர நேற்று முன்தினம் புத்தளத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அஙகு தொடர்ந்து பேசிய அமைச்சர், கடந்த 20வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தீவிர அக்கறையுடன் முயற்சிசெய்து வருகிறது.

சமாதானத்தை விரும்பாத் இனவாத சக்திகள் போடும் தடைகளை அகற்றி. அனைத்து இன மக்களும் எதிர்பார்க்கும் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முடியும்.

காஷ்மீர் விவகாரம் குறித்து இந்தியாவும், பாகிஸ்தானும் தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதைப் போன்று, இலங்கை இனப்பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும் என்றார். (தி)

# அபிவிருத்தித் திட்டங்களைக் கண்காணிக்க குழு நியமனம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 200தேர்தல் தொகுதிகளிலும் அமுல்செய்யப்படும் அபிவிருத்தித் திட்டங்களைக் கண்காணிப்பதற்கு ஐக்கியதேசிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

'சமாதான முறையில் உங்கள் பங்கு' என்ற நிகழ்ச்சித் திட்டத்திற்கமையவே அரசு இத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

பொருளாதாரக் கொள்கை சம்பந்தமான அமைச்சரவை உபகுழு எடுத்துள்ள இத் தீர்மானத்தின்படி, தேர்தல் தொகுதிகளிலும், பிரதேச சபை பகுதிகளிலும் சில அபிவிருத்தித் திட்டஙகளை அமுல்செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பாக இருக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10)

# நெல் கொள்வனவு மோசடியைக் கண்டறிய குழு அமைப்பு

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டக் கூட்டுறவுச் சங்க அமைப்புகளின் ஊடாக விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல்லிற்கு என்ன நடந்தது? என்பதைக் கண்டறியும் வகையில் திறைசேரி அதிகாரிகளை விசாரணை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே இதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிககைகளில் குறைபாடுகள் இருப்பது கணடுபிடிக்கப்பட்டதை அடுத்தே பிரதமர் மத்திய அமைச்சரவைக்கு இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இவ் விசாரணைக்காக ஏற்கனவே நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை நேற்று முன்தினம் பிரதமரிடம் கையளித்தது.

அவ் அறிக்கையில், கூட்டுறவு அமைப்புகள் கொள்வனவு செய்த நெல்லில் முறைகேடுகள் எவையும் நடைபெறவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால்; முடிவினை உறுதிப்படுத்தக்கூடிய எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்க மேற்படி குழு தவறிவிட்டது.

எனவே, இவ் விசாரணைகளை மேற்கொள்வதிலும் அரசாங்கத்தின் பணம் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையடுத்தே அரசு அடுத்தகட்ட விசாரணைக்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

## இன்று ஒரு தகவல்

# ஆறாவது அறிவு

வாழ்வில் மிகவும் அடிபட்டு அல்லல் பட்டுக்கொண்டிருக்கும் ஒருத்தர் வந்தா. மிகவும் நொந்து போய்ப் பேசினார். "இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்ததை விடமாடாகப் பிறந்திருக்கலாம் சார்" என்றார். "திடீரென்று என்னிடம் இப்படிக் கூறினால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்? என்றேன் உங்களிடம் வர வேண்டும் போல் தோன்றியது! அதனால் தான் வந்தேன்" என்றார்.

"சரி! இப்படி ஒரு யோசனை வந்ததற்கு என்ன காரணம்?" என்றேன். "எனது மகனுக்கு வேலை தேடுகிறேன். கிடைக்கவில்லை! மகளுக்கு மாப்பிள்ளை தேடுகிறேன் கிடைக்கவில்லை! வீடு கட்ட கடன்கேட்கின்றேன் கிடைக்கவில்லை! மாடாகப் பிறந்திருந்தால் இது போன்ற கவலைகள் எதுவும் இருக்காதல்லவா? பேசாமல் வைக்கோலைத் தின்று விட்டு அசை போட்டுக் கொண்டு இருந்திருக்கலாம்" என்றார் அலட்சியமாக.

அதன் பிறகு தான் அவர் கூறிய கருத்தை நானும் மனதுக்குள்ளே அசை போட ஆரம்பித்தேன். இயற்கையைப் பொறுத்தவரையில் அது நாம் எல்லோரும் ஒற்றுமையாக மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று தான் விரும்புகின்றது. விலங்குகள், பறவைகள், தாவரங்கள், உயிரினங்கள் எல்லாம் நன்றாக இருக்கவேண்டும் என்பது தான் இயற்கையின் விருப்பம். இயற்கையின் அமைப்பைச் சிறிது அவதானித்துப் பார்த்தால் அது விளங்கும். இருந்தாலும் இந்த ஆள் கூறியதைக் கேட்ட பிறகு தான் முக்கியமான ஒரு வேறுபாடு புரிந்தது.

இந்த உலகத்தில் உள்ள முக்கியமான பிரச்சினைகள் ஆறு. அந்த ஆறு பிரச்சினைகளும் ஆடு, மாடுகளுக்குக் கிடையாது. மரம், செடி கொடிகளுக்குக்கிடையாது. ஆனால் மனிதன் இந்த ஆறு பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது.

அந்த ஆறு பிரச்சினைகள் என்னென்ன தெரியுமா? முதலில் ஆடு, மாடுகள் எல்லாம் நமக்கென்று சொந்தமாக ஒரு வீடில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருப்பதில்லை. ஆனால் மனிதனுக்கு வீடு தேவைப்படுகிறது. இரண்டாவது ஆடைப்பிரச்சினை. ஒரு கோழியோ சேவலோ நாம் போட்டுக் கொள்ள ஒரு சட்டை இல்லையே என்று கவலைப்படுவதில்லை ஆனால் மனிதனுக்கு அந்தக்கவலை உண்டு.

மூன்றாவது கல்விப்பிரச்சினை. ஒரு பசு மாடு கவலையுடன் நின்று கொண்டிருக்கின்றது என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் அதன் அருகில் சென்று "ஏன் பசுமாடே கவலையோடு நின்று கொண்டிருக்கின்றாய்? என்று கேட்கின்றீர்கள். "எனது கன்றுக்குட்டிக்கு பாடசாலையில் இடம் கிடைக்கவில்லை. டொனேஷன் கொடுக்கப் பணமும் இல்லை" இப்படியா கூறிக்கொண்டிருக்கும்? அதற்கு அந்தக் கவலையெல்லாம் கிடையாது. ஆனால் மனிதனுக்கு இந்தக்கவலை உண்டு.

நான்காவது வேலைவாய்ப்புப் பிரச்சினை. வேலை கிடைக்கவில்லையே என்று வேப்பமரம் கவலைப்படுவதில்லை. ஆனால் மனிதன் கவலைப்படுகின்றான். அடுத்தது திருமணப்பிரச்சினை. எருமை மாடு, பசு மாடு எல்லாம் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி அலைவதில்லை. பேப்பரில் மணமகன் தேவை என்று விளம்பரம் கொடுப்பதில்லை.

ஆறாவது பணம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஆடு, மாடு எல்லாம் பணத்தைச் சேமிக்க வேண்டும் என்றோ ஏதாவது நிதி நிறுவனத்தில் முதலீடு செய்ய வேண்டும் என்றோ நினைப்பதில்லை. பணத்தை எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலையும் அவற்றிற்கு இல்லை.

குதிரை குளம்போடு பிறக்கின்றது. எனவே காடு மேடெல்லாம் கவலையின்றித் திரியலாம். ஆடு உடலில் உரோமத்துடன் பிறக்கின்றது. எனவே குளிரைப்பற்றி அது கவலைப்படவே தேவையில்லை. ஆனால் மனிதன் மட்டும் ஒன்றுமில்லாமல் பிறக்கின்றான் ஏன் இந்தப்பாகுபாடு.

இதை ஒரு பெரியவரிடம் கேட்டேன் அவர் கூறினார். தானும் இதே கேள்வியை இயற்கையிடம் கேட்டாராம். இயற்கை இப்படிப் பதில் கூறியதாம் அதாவது "இறைவன் வேறு யாருக்கும் கொடுக்காத ஒரு வலுவான கருவியை மனிதனுக்குக் கொடுத்திருக்கின்றான்! அந்தக்கருவியை உபயோகப்படுத்தி இந்த ஆறு பிரச்சினைகளை மட்டுமல்ல, ஆறு கோடி பிரச்சினை இருந்தாலும் சமாளிக்கலாம். அந்தக் கருவி எது தெரியுமா? அது தான் ஆறாவது அறிவு! அதை உபயோகப்படுத்தினால் காலுக்குச் செருப்புத் தயாரிக்கலாம். குளிருக்குப்போர்வை தயாரிக்கலாம். எதையும் செய்யலாம்" இது தான் இயற்கையின் பதில்!

எனவே நாம் செய்யவேண்டியது என்னவெனில் இயற்கையை முதலில் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். இயற்கையின் படைப்பையேநாம் சரியாகப்புரிந்து கொள்வதில்லை அது தான் வேதனை.

நகரத்திலிருந்து ஒருவன் கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றான். அங்கே ஒரு சிறுவன் மாடு மேய்த்துக்கொண்டிருந்தான். நகரத்து ஆள் கூறினான் "ஆகா! எவ்வளவு அழகான பசு அது சரி இதற்கெல்லாம் ஏன் கொம்பில்லை?" சிறுவன் பதில் கூறினான் "பசு மாட்டுக்குக் கொம்பு இல்லாததற்குப் பல காரணங்கள் உண்டு. கன்றுக் குட்டியாக இருந்தால் கொம்பு இருக்காது. பசு வளர்ந்த பிறகு தான் கொம்பு முளைக்கும். இது ஒரு காரணம்! சில சமயங்களில் வளரும் கொம்பை முறித்து விடுவது உண்டு. அது ஒரு காரணம். ஆனால் இதற்குக்கொம்பில்லை. ஏன் கொம்பில்லை என்று கேட்கின்றீர்கள் அதற்கு என்ன காரணம் என்றால் இது பசு இல்லை ...குதிரை என்றான்.

தெல்கச்சி கோ. சுவாமிநாதன்

### தமிழர் தாயகப் பிரதேச மாணவர்களுக்கு

# ஆங்கிலக் கல்வி மறுக்கப்படுவது அடிப்படை மனித உரிமை மீறல்

## சிவாஜிலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் எமது பிரதேசத்தையும் எமது மக்களையும் தொடர்ச்சியாகப் புறக்கணித்து வந்துள்ளமையினாலேயே இன்று பொது மக்கள் ஒவ்வொரு தேவைக்காகப் போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு யாழ். மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குமாகாணப் பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமை புரிவோர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பாக மறியல் போராட்டம் நடத்தி வருவது குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்துக் கூறுகையிலேயே சிவாஜிலிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், சிங்களப் பிரதேசங்களில்12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் மேலதிகமாகப் பணியாற்றி வரும் வேளையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 6 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். 6 ஆயிரம் பேரிற்கான வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை.

இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

இதனை வலியுறுத்தியே அவர்களும் போராட்டங்களை நடத்துகின்றனர். இவர்களின் போராட்டத்திற்கு நாமும் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறோம்.

அத்துடன்.வடக்கு-கிழக்கில் உள்ள பாடசாலை மாணவர்களிடம் ஆங்கில அறிவு மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையே இதற்குக்காரணம்.

குறிப்பாகக் கிளிநொச்சி மாவட்டத்திலே 94 பாடசாலைகளில் 18 பாடசாலைகளில் மாத்திரமே தலா ஒவ்வொரு ஆங்கில ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றார்கள். ஏனைய மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி மறுக்கப்பட்டு வருகிறது. அடிப்படைக்கல்வி மறுக்கப்படுவது மனித உரிமை மீறல் ஆகும் என்றார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது குறித்து



எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட் கிழமை தமிழ் தேசியக் கூட்டமைப்பினைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் இது பற்றி நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கத்துடன் சந்தித்துப் போசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## இராசி பலன்

**03.09. 2003**
**(ஆவணி,17,புதன்)**

**சப்தமி - மு.ப. 9.47 வரை**
**அனுசம் - மு.இ. 9.03 வரை**
**இராகுகாலம் - 12.05 - 1.35**
**சுபநேரம் - 4.35 - 6.05**
**அமிர்த சித்தம்**

**மேடம்**
தேவையற்ற பிரச்சனை, போசன சுகம், காரிய தடங்கல், தொழில் கஷ்டம்.

**இடபம்**
காரிய சித்தி, திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, தனவரவு.

**மிதுனம்**
சுகவாழ்வு, பண வருவாய், முயற்சி கை கூடும், பகைவரால் நன்மை.

**கடகம்**
தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, செய்தொழில் விருத்தி, வாக்கு பலிதம்.

**சிங்கம்**
கல்வியில் ஆர்வம், அற்பர் நேசம், சிந்தனை மிகுதி, மாதா சுகம்.

**கன்னி**
அன்னியர் சந்திப்பு, இனிய சம்பவம், காரிய சித்தி, தனவரவு.

**துலாம்**
மாதர் நட்பு, எதிர்பாராத நன்மை, கடும் வார்த்தை, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
நண்பர்கள் உதவி, காரிய நன்மை, தெய்வ சிந்தை, போசன சுகம்.

**தனுசு**
பிதா சிந்தை, உறவினர் சந்திப்பு, மனச்சஞ்சலம், தொழில் கஷ்டம்.

**மகரம்**
தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை.

**கும்பம்**
உற்சாகம், பிறர் ஒத்துழைப்பு, எடுத்த கருமங்கள் கை கூடும், நல்ல செய்தி.

**மீனம்**
உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், வீண் பயம், பெரியோர் மதிப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

-- வள்வன்.

# யாழ். பல்கலைக்கழகப் பணிகள் திங்கள் முதல் வழமை போல்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களின் கல்வி சாரா ஊழியர்கள் நடத்தி வந்த தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் கடந்த ஞாயிறுடன் முடிவுக்கு வந்ததையடுத்து யாழ். பல்கலைக்கழக நிர்வாகப்பணிகள் யாவும் திங்கள் முதல் வழமைக்குத் திரும்பியுள்ளன.

கடந்த மாதம் 12ஆம்திகதி முதல் தொடர்ந்து 18 நாட்கள் வரை தொடர்ச்சியாக நடை பெற்ற அனைத்துப் பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் கல்வி சார் நடவடிக்கைகள் நிர்வாகப் பணிகள் யாவும் செயலிழந்திருந்தன.

இந்நிலையில் கடந்த 30ஆம் திகதி பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்கம் கலவி அமைச்சருடனும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அதிகாரிகளுடனும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போது ஊழியர்களின் கோரிக்கைகள் ஏற்றுககொள்ளப்பட்டு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் தொடர் வேலை நிறுத்தப்போராட்டம் முடிவுக்கு வந்தமை தெரிந்ததே.

(உ-10)

# பெற்ற மகனைப் பிச்சையெடுக்க கூட்டிச் செல்லும் தந்தை

## தாய் பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மது அருந்துவதற்குப் பணம் இல்லாததனால் மகனைப் பாடசாலை செல்லவிடாது பிச்சை எடுக்கக் கூட்டிச் செல்லும் தனது கணவன் குறித்து பெண் ஒருவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சுவாரசியமான இச்சம்பவம் பளைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பளையைச் சேர்ந்தபி.இலங்கேஸ்வரன் என்பவர் தனது மகனைப் பாடசாலை செல்லவிடாது பிச்சை எடுக்கக் கூட்டிச் செல்வது வழக்கம்.

ஒரு தடவை பிச்சை எடுக்க மறுத்த சிறுவன் தந்தையின் தாக்குதலுக்குள்ளாகித் தலையில் படுகாயமடைந்தான்.

இதன் காரணமாக திடீர் திடீரென அவனுக்கு மயக்கம் வருவதும் வழக்கம்.

இந்த நிலைமையில் நேற்று முன்தினமும் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த பிரஸ்தாப்ச் சிறுவனை பச்சை எடுப்பதற்காகத் தந்தை கூட்டிச்சென்றுள்ளார்.

இதனைப் பொறுக்க மாட்டாத சிறுவனின் தயார் இதற்கோர் முடிவு கட்டுமாறு நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (த-7)

# சுட்டுக்கொல்லப்பட்டவரை மனைவி இனங்காட்டினார்

(வவுனியா)

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட நபரை அவரது மனைவி நேற்று முன்தினம் அடையாளம் காட்டியுள்ளார்

கணவன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மனைவி வவுனியா மாவட்டப் பதில் நீதவானிடம் நேற்று முன்தினம் வாக்கு மூலம் அளிக்கையில்,

எனது கணவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர் அந்த அமைப்பில் இருந்து விலகி 5 வருடங்கள் ஆகின்றன. அதன் பின்னர் திருமணமாகி ஒரு பிள்ளையும் எமக்கு உண்டு.

சிறிது காலம் பருத்தித்துறையில் வசித்து வந்த நாம் தற்போது வவுனியா நகரசபை மண்டபத்தில் வசித்து வருகிறோம்.

கடந்த வெள்ளியன்று வவுனியா நகருக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற எனது கணவர் வீடுதிரும்பவிலலை. ஊடகங்கள் மூலமே அவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டதாக அறிந்தேன் என்றார்.

(த-13)

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்
– குறள்

வலம்புரி

# வேலைவாய்ப்பு ஏதேனும் உண்டா?

ஐ.தே.முன்னணி அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் வேலைவாய்ப்புக்கள் ஏதேனும் வழங்கியதாகத் தெரியவில்லை. இதனால் மனித மூலதனம் வீணடிக்கப்படுவதுடன் சமூகச் சீரழிவுகளும் மலிந்துவிட்டன.

குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதியில் படித்த இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி காலத்தை வீணே கழிக்கின்றனர். இதனால அவர்கள் பிறரில் தங்கி வாழும் ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதுடன் மன நிலையாலும் பாதிப்படைந்துள்ளனர்.

தென்னிலங்கையைப் பொறுத்த வரை அங்கு தனியார்துறை வேகமாக வளர்ச்சி கண்டுள்ளதுடன் வெள்ளி நாட்டு முதலீடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதனால் அங்கு வேலையில்லாப் பிரச்சினை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. கணிசமான இளைஞர் யுவதிகள் தனியார் துறையிலும் வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். ஆனால் இந் நிலைமை வட பகுதியில் அறவேயில்லை எனலாம். தனியார் துறையின் வளர்ச்சி இங்கு பூச்சிய நிலையிலேயே உள்ளது. முதலீட்டு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த காலங்களில் இயங்கிய கைத்தொழிற்சாலைகள் கூட யுத்தத்தால் அழிவுற்றுள்ளன. அவற்றைப் புனரமைத்துச் சீர்படுத்தும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக வடபகுதி இளைஞர் யுவதிகள் வேலையற்று வெறுப்போடு காலத்தைக் கழிக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலைகள் இளைஞர்களை நெறிதவறிய பாதைக்கு இட்டுச் செல்கிறது. சமகாலத்தில் யாழ்.குடா நாட்டில் இடம் பெறும் இளைஞர்களின் தவறான செயற்பாடுகள், தீய பழக்கவழக்கங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது வேலையில்லாப்பிரச்சினையேயாகும். வேலையில்லாத காரணத்தினால் இளைஞர்கள் குழுவாகச் சேர்ந்து கொண்டு சமூக சீரழிவுகளுக்குப் பங்காற்றி வருகின்றனர். இதற்கும் மேலாக வெளிநாடுகளில் இருக்கின்ற உறவினர்கள் அனுப்பி வைக்கினற பணமும் இளைஞர்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்கிறது. வெளிநாடுகளில இருக்கின்ற உறவுகள், அங்கு வியர்வை சிந்தி உழைத்த பணத்தை தங்கள் உறவுகள் மீது கொண்ட பாசஉணர்வு காரணமாக இங்கு அனுப்பி வைக்கின்றனர். ஆனால் இங்குள்ளவர்களோ பொறுப்பின்றி அதனை வீண் விரயமாக்குகின்றனர்.

வியர்வை சிந்தி உழைக்காத வருமானத்தைச் செலவு செய்கின்ற போது அதில் இருக்கக் கூடிய அசமந்தமும் பொறுப்பற்ற தன்மையும் யாழ்.குடாநாட்டு இளைஞர்கள் பலரில் காணமுடிகிறது.

எனவே இது விடயத்தில் பெற்றோர்கள் பொறுப்புடன் செயற்படத் தவறுவார்களாயின் குறிப்பிட்ட கால இடைவெளியின் பின் இளைஞர்களின் நடத்தைகள் மிக ஆபத்தானதாக அமைவது திண்ணம்.

# சிற்றூர்திகளில் மிதிபடும் பயணிகள் மதிக்கப்படுவார்களா?

**செய்திக் கட்டுரை**

நேற்று முன்தினம் அதாவது கடந்த முதலாம் திகதி முதல், வட பிராந்திய போக்குவரத்துச்சபை, பேருந்துப் பயணக் கட்டணங்களை உயர்த்தியுள்ளது.

அதேபோல் யாழ்.மாவட்டச் சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையமும் விட்டேனா பார் என்ற ரீதியில் சிற்றூர்திப் பயணக் கட்டணங்களை உயர்த்தியுள்ளது.

இக்கட்டண உயர்வானது ஏழை மக்களைச் சற்றுத் திகைப்புறச் செய்திருக்கின்றது.

ஏன்? மற்றவர்களும் புருவங்களை உயர்த்தத் தவறவில்லை.

எரிபொருள் விலை உயர்வானது பயணக் கட்டணத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவது தவிர்க்கவியலாதது. எனினும், சாதாரண வாழ்க்கை வாழ்பவர்களைப் பற்றியும் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பது மனித இயல்புக்கு இலக்கணம்.

தவிர, இவைகள் சேவை என்பதையே இலக்காகக் கொண்டவை என்பதையும் மறைக்கவியலாது.

இப் புதிய நடைமுறையால். வடமராட்சி கிழக்கில் இருந்து யாழ்ப்பாணம் செல்கின்ற ஒருவர் இருவழிப் பயணத்திற்கு 60 ரூபாவினைச் செலுத்த வேண்டியவராகவுள்ளார்.

வடமராட்சியைச் சேர்ந்த பலரும் தமது வேலைகள் நிமித்தம் யாழ்.நகரையே நாடுகின்றவர்கள் என்ற வகையில், சாதாரண ஒரு தொழிலாளி தனது நாளாந்த உழைப்பில் கிட்டத்தட்ட அரைப் பங்கை பயணக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படியானால், இந்த மறுதாக்கத்தைக் கட்டுப்படுத்த சாதாரண ஊழியர்களின் நாட் சம்பளத்தை அதிகரிக்க வேண்டிய தேவையும் கூடவே எழுந்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, மக்கள் மத்தியில் இப்போது ஒரு கேள்வி பிறந்திருக்கிறது.

எரிபொருள் விலை உயர்வு என்று கேள்விப்பட்டவுடன், கட்டணத்தை உயர்த்தக் காத்திருக்கின்ற இந்த யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் இனியாவது மனித உரிமைகளைக் கொஞ்சம் கவனிக்கத் தலைப்படுமா? என்பதே அந்தக் கேள்வி.

கட்டண உயர்வில் காட்டுகின்ற கரிசனையை பயணிகளை மதிக்க வேண்டும் என்பதிலும் காட்டுவார்களா என்று பலரும் முணுமுணுப்பது காதில் விழுகிறது.

அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றுவதோடு அவர்களை மரியாதைக் குறைவாக நடத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ள சிற்றூர்தி நடத்துநர்கள் இனியாவது பயணிகளிடம் கொஞ்சம் கருணை காட்டுவார்களா?

மக்கள் உயிரைத் துச்சமென மதித்து, போட்டா போட்டி போட்டு வாகனத்தை ஓட்டுகின்ற சாரதிகள், பயணிகளும் மனிதர்கள் தானே என்று இனியாவது எண்ணுவார்களா?

இயலாதவர்களும், முதியவர்களும், கைக்குழந்தைக்காரர்களும் தள்ளாடி நிற்க, இளைஞர்களும்-யுவதிகளும் கால்மேல் கால்போட்டு சொகுசாக அமர்ந்திருக்கின்ற நிலையை மாற்றி, 'பெரியோரைக் கனம் பண்' என்ற மூத்தோர் வார்த்தையை மதித்து நடக்க வழிசமைப்பார்களா?

பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். □

**பிரயாணி**

## சமுர்த்தி வங்கி திறப்பு

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின் இரண்டாவது சமுர்த்தி வங்கி கடந்த சனியன்று கைதடியில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் இந்தச் சமுர்த்தி வங்கியை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

யாழ்.மாவட்டச் செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் வ.சத்தியசீலன் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைக்க, மங்கள விளக்கினை யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரகுமார் ஏற்றிவைத்தார். ஆசி உரையை யோகானந்தீஸ்வரக் குருக்கள் வழங்கினார். (உ-36)

# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் சிறப்பான முறையில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

'ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்' என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு, யாழ்.மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் நேற்று முன்தினம் முதல் முன்னெடுத்துவரும் மிதிவெடி அபாயக் கல்விவாரச் செயற்பாடுகள் மிகச் சிறப்பான முறையில் யாழ்.குடாநாடு முழுவதும் இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில், மிதிவெடி அபாயம் பற்றிய அறிவை மக்களிடையே விஸ்தரிக்கும் நோக்கில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகளில் ஊர் ஊராகச் சென்று அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதுடன், செய்தி ஊடகங்களூடாக விளம்பரப்படுத்தல், திரை அரங்குகளில் விவரணப் படங்களைக் காண்பித்தல் ஆகியன மூலம் மிதிவெடி பற்றிய அபாயக் கல்வி புகட்டப்படுகிறது.

அத்துடன், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் விழிப்புணர்வுப் பதாதைகள் நாட்டப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இது தவிர, தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியனவும் இச் செயற்திட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்கி வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இவ் மிதிவெடி அபாயக் கல்விவாரத்தை ஒட்டிய கண்காட்சி நேற்று முன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆரம்பமானது.

சிறுவர் கழகங்களின் இணையத் தலைவி தலைமையில் இடம்பெற்ற இக்கண்காட்சியை மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத் திட்டப் பணிப்பாளர் எஸ்.சுந்தரம்பிள்ளை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ச்சியாக நான்கு தினங்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறும் இந்தக் கண்காட்சி இறுதி மூன்று தினங்களும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவி[illegible] குறிப்பிடத்தக்கது. (உ)

# மிதிவெடி விழிப்புணர்வுச் செயற்றிட்ட விளக்கம்

(யாழ்ப்பாணம்)

நாடக ஆற்றுகைகள் மூலம் கடந்த இரண்டு வருடங்களாக மிதிவெடி விழிப்புணர்வை குடாநாட்டில் ஏற்படுத்திவரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், தமது ஆற்றுகை இடம்பெற்ற இடங்களில் நேரடியாகக் கண்டு, கேட்டறிந்து கொண்ட பிரச்சினைகள், குறைபாடுகள், கெடுபிடிகள் என்பவற்றை அனைவரும் அறியச்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மூலம் மேற்படி பிரச்சினைகள், குறைபாடுகள் என்பவற்றுக்கு சம்பந்தப்பட்ட தரப்புகளினால் தீர்வுகள், விளக்கங்கள் முன்வைக்கப்படுமென இந்த நிறுவனம் நம்புகின்றது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக காரைநகர் பகுதியில் இனங்காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் 10ஆம் திகதி மு.ப. 10.00மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது. (உ)

# வெளிநாடுகளில் பணிபுரிபவர்களினால் 1200 மில்லியன் டொலர் வருமானமாகக் கிடைக்கும்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுச் சென்றுள்ள இலங்கையர்கள் மூலம் இவ்வருடம் ஆயிரத்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இந்த வருமானம் ஆயிரத்து 100 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து கடந்த 6 மாத காலங்களில் தொழில் வாய்ப்பைப் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்களினால் இலங்கையின் அந்நியச் செலாவணி 12சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

ஐக்கியதேசிய முன்னணி அரசு கடைப்பிடிக்கும் நிலையான பொருளாதாரக் கொள்கை மற்றும் மத்திய வங்கி கடைப்பிடிக்கும் நிதி நடவடிக்கைகள் காரணமாகவே இந்த முன்னேற்றம் காணப்படுவதாக இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது. (தி)

# மாகாணசபை அங்கத்தவர்களுக்கு எதிராக எட்டு மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமல் நியமனம் பெற்ற சகல மாகாணசபை அங்கத்தவர்களினதும் அங்கத்துவத்தை ரத்துச்செய்யும்படி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் எட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இத்தேர்தலில் தோல்விகண்ட வேடபாளர்களும், வாக்காளர்களும் இம்மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனுக்கள் பெரும்பாலானவற்றில் மேல்மாகாண முதலமைச்சா ரெஜினோல்ட் குரேயின் நியமனம் ரத்துச்செய்யப்படவேண்டுமென்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல்மாகாண முதலமைச்சர் உட்பட வடமத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிறேமலால் திஸநாயக்க, ஊவாமாகாண சபையின் மூன்று அங்கத்தவர்கள்,சப்பிரகமுவ மாகாண சபையின் இரு அங்கத்வருக்கும் எதிராகவே இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதென மேன்முறையீட்டு நீதிமனறம் தீர்மானித்துள்ளது. (தி)

# தினசரி தியானம்

## அகம்பாவம்

அகம்பாவம் உடையவன் அறியாமையைத்தான் விரும்புகிறான. தனது முட்டாள்தனத்தைப்பற்றி பெருமையாய் பேசுகிறான். அழியக்கூடியதன் உடலுக்கு மிக முக்கியத்துவம் தருகிறான். இதன் காரணமாகத் தானாகவே ஆபத்தாகிய காற்றிலும், பகையாகிய புயலிலும், விதி மற்றும் துயரங்களின் தாக்குதலிலும் அகப்பட்டுக் கொள்கிறான். இப்படிப்பட்டவனுக்கு நிலைத்த நன்மையும் மேலான இன்பமும் தரும் வீட்டுத் தலைவாசலில் நுழைய அனுமதியில்லை. அகம்பாவம் இன்றி இறைவனைச் சரண் அடைபவன் எல்லாச் சக்தியும், ஆற்றலும் நிறைந்தவனாவான். இவன் வீடுபேற்றை விரைவில் அடைகிறான்.

சுவாமி சிவானந்தர்

# ஐ.நா.சபையில் உரை நிகழ்த்த வாய்ப்பளிக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கியநாடுகள் அமைப்பின் மாநாட்டில் உரை நிகழ்த்துவதற்கு தனக்கு அனுமதியளிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கியநாடுகள் செயலாளா நாயகம் கோபி அனானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

கடந்த 10 நாட்களுக்கு முன்னா ஜனாதிபதி இந்தக் கோரிக்கையினை செயலாளர் நாயகத்திடம் நேரடியாகவே விடுத்துள்ளார் என இலங்கைக்கான ஐக்கியநாடுகள் சபையின் தூதுவர் ஊடாக அறியமுடிந்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் டிரோன பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் உரை நிகழ்த்த இருந்த நிலையில், இவ்விடயம்குறித்து தனககோ அன்றி அரசாங்கத்திற்கோ இதுவரை ஜனாதிபதி எவ் அறிவித்தலையும் விடுக்கவில்லை.

இதனால், ஐக்கியநாடுகள் சபையில் இலங்கை தொடர்பாக ஒரு தவறான அபிப்பிராயம் ஏற்படாமல் இருக்க, தமது பயணத்தை இரத்துச் செய்து அந்த வாய்ப்பை ஜனாதிபதிக்கு அளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# புலிகளின் இடைக்காலத் திட்ட வரைபு

# மூன்று வாரங்களில் கையளிக்கப்படும்

## சு.ப.தமிழ்ச்செல்வன் சுவிஸில் தெரிவிப்பு

(பெர்ன்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களினாலும் சர்வதேச சட்ட வல்லுநர்களாலும் பரிஸில் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை திட்டவரைபு விடுதலைப் புலிகளின் தலைவரின் பரிசீலனையின் பின் இன்னமும் மூன்று வார காலத்துக்குள் நோர்வே அரசின் மூலம் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்க உள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சுவிஸில் வைத்து தெரிவித்துள்ளார்.**

பரிஸில் தயாரிக்கப்பட்டுள் இடைக்கால நிர்வாகசபை திட்ட வரைபு குறித்து சு.ப.தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் எமது தலைமைப் பீடத்தின் பணிப்புக்கும் எதிர்பார்ப்புக்கும் அமைய இடைக் கால நிர்வாக சபை குறித்த திட்ட வரைபை நாம் தயாரித்துள்ளோம்.

இதில் சர்வதேச ரீதியில் அனுபவம் ஆற்றல்கள் பெற்ற எமது தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டமை எமக்கு மிகவும் ஆக்க பூர்வமானதாக இருந்தது. நாங்கள் உருவாக்கியுள்ள இந்தத் திட்ட வரைபு தலைவரிடம் சமர்ப்பித்து அவர் பரிசீலித்த பின்னர் நோர்வேயின் மூலமாக இலங்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இத் திட்டவரைபை அரசு ஏற்று சமாதானத்தை ஏற்படுத்துமென நான் நம்புகிறேன் என்றும் தமிழ்ச் செல்வன் கூறினார். (ம)

## மிதிவெடி அபாய கருத்தரங்கு

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் சர்வோதய மிதிவெடி விழிப்புணர்வு அபாயக் கல்வி, வெளிக்கள உத்தியோகத்தரின் பங்களிப்புடன் மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நாளை வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் சம்மந்தப்பட்ட நிலையங்களின் பிரதிநிதிகள், பாடசாலை உயர்தர மாணவர்கள் மற்றும் திணைக்களப் பணியாளர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## தென்னிந்திய சுவாமிகளின் ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள நித்திசைதன்ய சுவாமி, ஹரி ஓம் அம்மா ஆகியோர் இன்று பி.ப 4 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள வேதாந்த மடத்திற்கு வருகை தந்து ஆன்மீக சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர். (உ)

### தமிழ்பேசும் இளைஞர்களே...

தமிழ பேசும் இளைஞர்கள் பொலிஸ் படையில் சேர்வது தொடர்பாக விழிப்படையுங்கள் என்ற தலைப்பில் விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

முஸ்லிம் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென பொலிஸ் சேமப் படையில் சேர்க்கப்படும் தமிழ் பேசும இளைஞர்கள் தொடர்பாக முஸ்லிம் புத்திஜீவிகளும் கல்விமான்களும் முதலீட்டாளர்களும் தெளிவாகவும் தூர நோக்கோடும் சிந்திக்க வேண்டிய காலம் இது. எமது தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசத்திலும் தமிழ் பேசும மக்கள் வாழ்ந்த இடங்களிலும் காட்டுமிராண்டித்தனமாக நடத்தப்பட்ட கொலைகளே எமது தாயகம் முழுவதும் விடுதலைப் போராட்ட தீச்சுவாலை வேகமாக பரவக் காரணமாக இருந்ததுடன் ஒருநாட்டில் சமாந்தரமான இரண்டு படையினர் என்ற நிலைக்கு வந்திருக்கின்றது.

பேரினவாத அரசு நன்கு திட்டமிட்டு இனங்களுக்கிடையில் முரணபாடுகளை உருவாக்கியது. இதனை விளங்கிக் கொள்ளாத நாம் பல துன்பியல் சம்பவங்களுக்கு உள்ளானோம்.

இன்று எமது தாயகப் பிரதே கொண்டு வருகின்ற இந்தக் காலத்தை அவர்களால் சகித்துள் கொள்ள முடியாதுள்ளது. இதனை என்றுமே விரும்பவில்லை. அவர்களின் மூலோபாயத்தில் அன்றும் இன்றும் என்றும் இது இருந்தே வருகின்றது.

சர்வதேச மத்தியஸ்தத்துடன் இன்றைய உலக ஒழுங்கிற்கு அமைய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்கள் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனை நன்கு உணராத முஸ்லிம் அரசில்வாதிகள் மற்றும் அவர்களுடன் துணைபோகின்ற தீய சக்திகள் தொடர்பாக நீங்கள் அனைவரும் விழிப்பாக இருங்கள். நாம் என்றும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருப்போம் என்பதனை நீங்கள் உறுதியாக நம்புங்கள் என்று உள்ளது.

இதேவேளை "தமிழீழ இளைஞர்களே!" என்ற தலைப்பிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் துண்டுப்பிரசுரம் ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில்,

எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் பலம் அடைந்து, உலகமே வியக்கும் இராணுவ சக்தியாக சர்வதேச அரங்கில்

### வேலைக்கு...

(வயது 16) என்பவருமே காணாமல் போயுள்ளனர்.

இதேவேளை, இவர்கள் வேலைக்குச் சென்ற இடத்தில் இவர்கள் அணிந்திருந்த ஆடைகளில் சிலவும் பாதணிகளும் காணப்பட்டதாகவும்,

காணி உரிமையளர் மற்றும் அயலவர்கள் ஆகியோரும் மதியத்திற்குப் பிறகு தாம் காணவில்லை எனத் தம்மிடம் தெரிவித்ததாகவும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ-4)

### வவு.நகரில்...

இல்லாமல் இரவிரவாக கைது செய்துள்ளரென அவர் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இதேவேளை, வவுனியா நகரப் பொலிஸ் அதிகாரி ரி.கே.மிஸ்கின் இச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்;

இரவு வேளைகளில் போதைப் பொருட்களைப் பாவித்து விட்டு வீதியில் செல்கின்ற பெண்களுடன் சேட்டை புரிகின்ற இளைஞர்களையே தாம் கைது செய்ததாகவும் அவர்களில் பெரும்பாலானோர் விடுவிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். (இ-13)

அதனையும் மீறி இணைவதென்பது

## நீதிபதியை அவமதித்தோர் தண்டனை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவை அவமதித்த குற்றத்துக்காக நான்கு பேருக்கு தலா இரண்டாயிரம் ரூபா தண்டப்பணமும் ஐந்து வருடம் ஒத்திவைக்கப்பட்ட 3 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 7-ந் திகதி யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நீதிபதி பயணம் செய்த காரை வழிமறித்து அவரை அவதூறாகப் பேசியதற்காக நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றத்தில் மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன் போது பிரஸ்தாப நபர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.இதனையடுத்து மேற்படி தீர்ப்பை நீதிபதி வழங்கினார். (இ-4)

### குரங்குபாஞ்சானில்...

ளனர்.

இதேவேளை, பெரும் சர்ச்சையைக் கிளப்பி நிற்கும் விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமையகற்ற பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தமையும் அதனை அகற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் ஜனாதிபதிக்கு பதில் அனுப்பியுள்ளமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (இ)

### பாலாவின்...

### ஜனாதிபதி...

அரசியலினை சீராக முன்னெடுத்துச் செல்ல முடியும். இதனால் நாடும் முன்னேற்றப் பாதையில் செல்லும்.

அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை சீராக முன்னெடுத்துச் செல்லுமெனின், தனியார் முதலீடு களையும் அரசாங்க முதலீடுகளையும் ஒன்றாக மேற்கொள்ளமுடியும். முதலீடுகள் நிதிப்பற்றாக் குறையால் தாமதிக்கின்றன எனக் கூற முடியாது. ஆனால் மேலும் உறுதியான ஒரு அரசியல் சூழல் முன் கூட்டியே புரிந்து கொள்ளக் கூடிய ஒரு கொள்கைச் சூழல் சமர்தான

முதலீட்டாளர்களும் தெளிவாகவும் தூர நோக்கோடும் சிந்திக்க வேண்டிய காலம் இது. எமது தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசத்திலும் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த இடங்களிலும் காட்டு மிராண்டித்தனமாக நடத்தப்பட்ட கொலைகளே எமது தாயகம் முழுவதும் விடுதலைப் போராட்ட தீச்சுவாலை வேகமாக பரவக் காரணமாக இருந்ததுடன் ஒருநாட்டில் சமாந்தரமான இரண்டு படையினர் என்ற நிலைக்கு வந்திருக்கின்றது.

பேரினவாத அரசு நன்கு திட்டமிட்டு இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கியது. இதனை விளங்கிக் கொள்ளாத நாம் பல துன்பியல் சம்பவங்களுக்கு உள்ளானோம்.

இன்று எமது தாயகப் பிரதேசத்தில் யுத்தமற்ற சூழல் உருவாகி ஒவ்வொருத்தரும் தமது வாழ்வியலை வளம்படுத்த முயல்வதுடன் இதனை வலுப்படுத்துவதற்காக எமது தரப்புப் பிரதிநிதிகளும் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளும் பல கலந்துரையாடல்களை நடத்தி அதிகமான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு அரசில்வாதிகள் மற்றும் அவர்களுடன் துணைபோகின்ற தீய சக்திகள் தொடர்பாக நீங்கள் அனைவரும் விழிப்பாக இருங்கள். நாம் என்றும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருப்போம் என்பதனை நீங்கள் உறுதியாக நம்புங்கள் என்று உள்ளது.

இதேவேளை ''தமிழீழ இளைஞர்களே!'' என்ற தலைப்பிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் துண்டுப்பிரசுரம் ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில்,

எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் பலம் அடைந்து, உலகமே வியக்கும் இராணுவ சக்தியாக சர்வதேச அரங்கில் தமிழர் தம் உரிமைதனை தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்வேளை தமிழ் இளைஞர்களில் ஒரு சிலர் சிங்களப் பொலிஸ் படையில் இணைவது வேதனைக்குரிய விடயமாகும்.

தமிழ் இளைஞர்களை சிங்களப் படையில் இணையவேண்டாம் என நாம் முன்னர் அறிவித்திருந்தோம். அதனையும் மீறி இணைவதென்பது எமது விடுதலைப் போராட்டத்தை புரிந்து கொள்ளாத் தன்மையைப் புலப்படுத்தும் என்பதால் சிங்களப் பொலிஸ் படையில் இணைவதனை உடன் நிறுத்தி எம் தலைவனின் காலத்தில் ஓர் அணியாகத் திரள்வோம் சுதந்திரம் மீட்க என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## வவு.நகரில்...

இல்லாமல் இரவிரவாக கைது செய்தனரென அவர் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இதேவேளை, வவுனியா நகரப் பொலிஸ் அதிகாரி ரி.கே.மிஸ்கின் இச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்;

இரவு வேளைகளில் போதைப் பொருட்களைப் பாவித்து விட்டு வீதியில் செல்கின்ற பெண்களுடன் சேட்டை புரிகின்ற இளைஞர்களையே தாம் கைது செய்ததாகவும் அவர்களில் பெரும்பாலானோர் விடுவிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். (இ-13)

---

னையும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 7-ந் திகதி யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நீதிபதி பயணம் செய்த காரை வழிமறித்து

## குரங்குபாஞ்சானில்...

ளனர்.

இதேவேளை, பெரும் சர்ச்சையைக் கிளப்பி நிற்கும் விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமையகற்ற பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தமையும் அதனை அகற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் ஜனாதிபதிக்கு பதில் அனுப்பியுள்ளமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (இ)

## பாலாவின்...

சிந்தனையில் இருப்பவர்கள் பிரச்சினையாக எடுத்து பல கட்டுக்கதைகளைக் கட்டிவிடுவது வேதனைக் குரிய விடயமாகும். உடல் நிலை பதிப்புக்குள்ளாகி இருக்கும் ஒருவரை-மனிதாபிமான நெருக்கடியினை சந்தித்துக் கொண்டிருக்கும் ஒருவரை தங்களுடைய அரசியலுக்கு பயன்படுத்திக் கொள்வது எங்களுக்கு மிகவும் அதிர்ச்சியாகவும் வேதனையாகவும் இருப்பதாகவும் தெரிவித்தார். (ந)

---

இடம்பெற்றது.

இதன் போது பிரஸ்தாப நபர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனையடுத்து மேற்படி தீர்ப்பை நீதிபதி வழங்கினார். (இ-4)

## ஜனாதிபதி...

அரசியலினை சீராக முன்னெடுத்துச் செல்ல முடியும். இதனால் நாடும் முன்னேற்றப் பாதையில் செல்லும்.

அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை சீராக முன்னெடுத்துச் செல்லுமெனின், தனியார் முதலீடு களையும் அரசாங்க முதலீடுகளையும் ஒன்றாக மேற்கொள்ளமுடியும். முதலீடுகள் நிதிப்பற்றாக் குறையால் தாமதிக்கின்றன எனக் கூற முடியாது. ஆனால் மேலும் உறுதியான ஒரு அரசியல் சூழல் முன் கூட்டியே புரிந்து கொள்ளக் கூடிய ஒரு கொள்கைச் சூழல் சமர்தான வேலைத்திட்டத்தின் . உறுதியான முன்னேற்றம் என்பன ஏற்படும் போது முதலீடுகள் பெருகும் என்றும் ஜெரமி காட்டர் மேலும் தெரிவித்தார். (இ)


உ

# விவாக சோபன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சுபானு வருடம் ஆவணிமாதம் 19ம் நாள் (05-09-2003) வெள்ளிக்கிழமை காலை மூல நட்சத்திரமும் பூர்வபட்ச தசமித்திதியும், அமிர்தசித்த யோகமும், துலாலக்கினமும் கூடிய பகல் 8.54 மணிமுதல் 10.28 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

பிரம்மஸ்ரீ கு.கணேசக்குருக்கள், ஜெயலஷ்மி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்

பிரம்மஸ்ரீ சண்முகராஜரத்தின சர்மா, லலிதாதேவி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி



சிரஞ்சீவி **நிரஞ்சன சர்மா** அவர்களுக்கு

**சுகன்யா** அவர்களை

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்து வைக்கச் சித்திவிநாயகப் பெருமானதும் அம்பிகையினதும் திருவருட் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் வட்டாக்கை கந்தரோடையில் உள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறும் முகூர்த்த வைபவத்திற் தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

சமாவர்த்தனம் :- 05.09.2003 வெள்ளிக்கிழமை காலை 5.00 மணிக்கு நடைபெறும்

வரவேற்பு உபசாரம் :- சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் வடக்கு வீதியில் அமைந்துள்ள சிவஸ்ரீ - கு.தியாகராஜக் குருக்கள் தம்பதிகள் இல்லத்தில் நடைபெறுவதுடன் புதன்கிழமை (10.09.2003) மாலை 5.00மணிக்கு வவுனியாவில் உள்ள மணமகன் இல்லத்திலும் நடைபெறும்

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்.

சிவஸ்ரீ கு.கணேசக்குருக்கள் தம்பதிகள்
51, குருமன்காடு, வவுனியா,
T.P.: 024 - 23438
கு.தியாகராஜக்குருக்கள் (மணிஐயா)
அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி.

திருமதி லலிதாதேவி சண்முகராஜரத்தின சர்மா
வட்டாக்கை, கந்தரோடை.

(இரு வீட்டார் அழைப்பு) [C/6613]



## உடன் தேவை

தமிழ்த் தட்டச்சு இயந்திரம் உடன் தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

விளம்பர இல.100
மே/பா. வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்



## சிற்றூழியர்கள் தேவை

எமது நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு (பகல், இரவு) சிற்றூழியர்கள் தேவை. வயது 18 தொடக்கம் 50 வயது வரை.

யாழ்.நகரத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில் இருப்பவர்கள் மட்டும் 03.09.2003 இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்

வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்


## 5ம் தர புலமைப் பரட்சை வினாத்தாள் - 32

மாணவர் முழுப்பெயர்:..........................................

பாடசாலையின் பெயர்:..........................................

வீட்டின் முகவரி:..........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 10.09.2003இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

**வலம்புரி**
**கல்விப்பகுதி,**
**15,வெள்ளாந் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.